# இலக்கு


GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 237 | சனி, ஜூன் 03, 2023 | 14 பக்கம்

## ஊடகங்கள் மீதான கெடுபிடி; ரணிலின் நோக்கம் என்ன?

அகிலன்

## தமிழர்களின் நிலங்களைப் பறித்து / அபகரித்து சிங்களவர்களுக்கு வழங்குகின்றார்கள்



முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்



## ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்க யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட 42வது ஆண்டு

பற்றிமாகரன்



© 2023 இலக்கு இணையம்

# துப்பாக்கியால் இலக்குவைக்கப்பட்ட கஜேந்திரகுமார்

## ஈழத்தமிழர் பேரவை– ஐக்கிய இராச்சியம் கண்டனம்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினை அரச புனாய்வுப்பிரிவினைச் சேந்தவர் தாக்கி விட்டு தப்பிச் சென்றதோடு, பிறிதொரு நபர் துப்பாக்கிப்பிரயோகம் நடத்துவதற்கு இலக்குவைத்துள்ள சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது.

இந்நிலையில், ஈழத்தமிழர் பேரவை – ஐக்கிய இராட்சியம் தனது கடுமையான கணடனத்தை வெளியிட்டுள்ளது.

அதில், இன்று யூன் 2ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி பற்றி உங்களது கவனத்திற்கு கொண்டுவ ருகிறோம்.

தொடர்ச்சி 05 ஆம் பக்கம்

## பொருளாதார நெருக்கடி – குறைந்தவருமானம் பெறும் மக்களே அதிகம் பாதிப்பு– செஞ்சிலுவை குழு

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக குறைந்தவருமானம் பெறும் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச செஞ்சிலுவை குழு தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைகுழு, இலங்கை செஞ்சிலுவை குழுவுடன் இணைந்து இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட 11850 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிற்கு அவசரநிவாரண உதவிகளை வழங்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரநெருக்கடியால் அதிகம்பாதிக்கப்பட்டது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் எனத் தெரிவித்துள்ள கொழும்பிற்கான ஐசிஆர்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் செவரைன் சப்பாஸ்,

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## மேற்குலகத்தின் பண பரிமாற்ற முறைக்கு மாற்றீட்டை ஏற்படுத்த ஆசிய நாடுகள் திட்டம்

மேற்குலக நாடுகள் தமது பணம் மற்றும் பண பரிமாற்ற முறைகளை ஆயுதங்களாக பயன்படுத்திவரும் நிலையில் அதற்கு மாற்றீடான பணப் பரிமாற்ற பொறிமுறை ஒன்றை உருவாக்க ஆசிய நாடுகள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் உட்பட 9 நாடுகளின் மத்திய வங்கிகளை கொண்ட Asian Clearing Union (ACU) என்ற அமைப்பே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.




மேற்குலகத்தின் SWIFT என்ற பணபரிமாற்ற தகவல் முறைக்கு நிகரான புதிய பரிமாற்ற முறையை இந்த மாதம் அறிமுகப்படுத்த உள்ளதாக ஈரானை தளமாகக் கொண்ட ஊடகமான Kayhan தெரிவித்துள்ளது.

தற்போது இந்த முறை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## சிகரட்டுகளில் எச்சரிக்கை வாசகம் பொறிக்க கனடா தீர்மானம்




இதுவரை காலமும் சிகரட்டுக்களின் பெட்டிகளில் பொறிக்கப்படும் எச்சரிக்கை வாசகங்களை எதிர்வரும் நாட்களில் நேரிடையாக ஒவ்வொரு சிகரட்டுக்களிலும் பொறிப்பதற்கு கனேடிய அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த 75 நாட்களாக மக்களின் கருத்துக் கணிப்புக்கு விடப்பட்ட இந்த தீர்மானம் தற்போது நடைமுறைக்கு வரவுள்ளதாகவும், உலகிலேயே ஒவ்வொரு சிகரட்டுக்களிலும் எச்சரிக்கை வாசகம் பொறிக்கும் முதல் நாடு கனடாவே எனவும் கனேடிய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் சிகரட்டுக்களில் "புகைத்தல் புற்றுநோயை உண்டாக்கும்" "ஒவ்வொரு புகையிலும் நஞ்சு உள்ளது" போன்ற வாசகங்கள் எழுதப்படவள்ளன.

புகைப்பதினால் கனடாவில் ஆண்டுதோறும் 48,000 பேர் இறப்பதாக கனடாவின் மனநல மருத்துவத்துறை அமைச்சர் கரோலின் பேர்னாட்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஒடிஷா மாநிலத்தில் தொடருந்து விபத்து

## 200க்கும் மேற்பட்டோர் பலி,1000க்கும் மேற்பட்டோர் படுகாயம்



ஒடிஷா மாநிலம் பாலசோர் அருகே 2 பயணிகள் தொடருந்துகளும், ஒரு சரக்கு தொடருந்தும் மோதிக் கொண்ட விபத்தில் 233 பேர் உயிரிழந்தனர். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

காயங்களுடன் மீட்கப்பட்ட பயணிகள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள் ளனர். ஹவுரா - சென்னை கோரமண்டல் எக்ஸ்பிரஸ், யஷ்வந்த்பூர் - ஹவுரா சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ஆகியன விபத்தில் சிக்கி பயணிகள் தொடருந்துகள் ஆகும்.

விபத்து நடந்த இடத்தில் இன்னும் மீட்புப் பணிகள் தொடர்கின்றன. இதனால், அந்த மார்க்கத்தில் செல்லும் சென்னை - ஹவுரா எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட தொடருந்துகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ஒடிசாவில் நடந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் ஒருநாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

# வடகொரியாவின் உளவு செய்மதி நடுவானில் வெடித்து சிதறியது

கடந்த புதன்கிழமை (31) வடகொரியா முதல் முதலாக ஏவிய படைத்துறை உளவு செய்மதி ஏவுகணை ஏவப்பட்ட சில நிமிடங்களில் நடுவானில் வெடித்து சிதறியதால் திட்டம் தோல்வியில் முடிந்துள்ளது.

வடகொரியாவின் ஏவுகணை முயற்சியை அமெரிக்கா, யப்பான், தென்கொரியா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன கண்டித்திருந்த போதும் தமது நாட்டின் இறைமையை காப்பாற்ற தாம் மீண்டும் ஏவுகணையை ஏவப் போவதாக வடகொரிய அதிபர் கிம் ஜோங்கின் சகோதரி கிம் ஜோ தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் இந்த நீண்டதூர ஏவுகணையானது வானில் செலுத்தப்பட்டதும் இரு துண்டுகளாக உடைந்து கொரியன் வளைகுடாவில் உள்ள மேற்கு கடல் பகுதியில் வீழ்ந்துள்ளது. எனினும் ஏவுகணையில் என்ன தவறு நடந்தது என்பதை கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்து மீண்டும் ஏவப்பேவதாக வடகொரியா தெரிவித்துள்ளது.


1998 ஆம் ஆண்டில் இருந்து வடகொரியா 5 செய்மதி களை ஏவியுள்ளது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பொருளாதார வீழ்ச்சியை தடுக்க கடன் பெறும் தொகையை உயர்த்திய அமெரிக்கா

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை தடுக்கும் முகமாக அமெரிக்காவின் இரு பெரும் அரசியல் கட்சிகள் இணைந்து கடன் பெறும் தொகையை 1.5 றில்லியன் டொலர்களால் அதிகரித்துள்ளன.

கடன்கள் மற்றும் கொள்வனவு செய்யப்படும் பொருட்களுக்கான நிதியை செலுத்துவதற்கு அமெரிக்காவிடம் பணம் இல்லாத நிலை ஏற்பட்டதுடன், அதன் கால எல்லை ஜூன் 1 ஆம்



நாளுடன் முடிவடைய இருந்த நிலையில் கடந்த மாதம் 31 ஆம் நாள் அமெரிக்காவின் ஜனநாயக மற்றும் குடியரசுக்கட்சிகள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## மேற்குலக ஊடகங்களை புறக்கணித்த ஒபேக் கூட்டமைப்பு

இந்த வாரம் ஒஸ்ரியாவில் இடம்பெறும் ஒபேக் எனப்படும் எண்ணை ஏற்றுமதி நாடுகளின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்கு மேற்குலகத்தின் முன்னனி ஊடகங்களான புளும் பேர்க் மற்றும் றொய்ட்டர்ஸ் போன்ற நிறுவனங்களை அழைப்பதை ஒபேக் கூட்டமைப்பு தவிர்த்துள்ளதாக அந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.




அமெரிக்காவின் த வோல் ஸ்றீற் ஜேர்னல் எனப்படும் ஊடகமும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கடந்த புதன்கிழமை (31)

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# “நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்”

## நூல் வெளியீடு

*சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் அவர்கள் எழுதி, அவரது இயற்கை எய்துதலுக்கு முன் அவரால் வெளியீடு செய்ய முடியாமற்போன ”நினைவுகள்; நிகழ்வுகள்; நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்” என்னும் நூலின் வெளியீடு கடந்த மே திங்கள் 27ஆந் திகதி சனிக்கிழமையன்று வவுனியா கந்தசாமி கோவில் மண்டபத்தில் பி.ப. 03.00 மணிக்கு சிறப்புற அரங்கேறியது. அவரின் இவ்வெண்ணப் பகிர்வை வெளியிட அவர் திட்டமிட்டிருந்த, மே திங்கள் 27ஆந் திகதியே அதனை வெளிக்கொணர அவரது துணைவியார் திருமதி நாகேஸ்வரி மாணிக்கவாசகம் அவர்கள் எடுத்த இலட்சிய முயற்சியால் அதேதினத்தில் இந்த நூல் வெளிவந்துள்ளமை இவ்வெளியீட்டு விழாவின் சிறப்பம்சமாகும். இந்நூல் அமரர் மாணிக்கவாசகம் அவர்கள் படைத்துள்ள 5வது நூல் என்பதுவும் இங்கு நினைவுகூரத்தக்கது.*



*விழாவிற்கு வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரிய வளநிலைய பொறுப்பாசிரியர் திரு. சு. ஜெயச்சந்திரன் தலைமை தாங்கினார். திருமதி தி. திரிபுரசுந்தரி அவர்களின் தேவார பண்ணிசையை தொடர்ந்து, திருமதி நா. மாணிக்கவாசகம் அவர்களின் ஒற்றை சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகிய விழாவில் எழுத்தாளர் மேழிக்குமரன் அவர்களின் வரவேற்புரையால் அவையோர் அனைவரும் வரவேற்கப்பட்டனர்.*

*விழாவின் சிறப்புரைஞர்களான வவுனியா பல்கலைகழக உபவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன், கவிஞர் லதா கந்தையா மற்றும் ”வீரகேசரி” உதவி ஆசிரியர் R. ராம் ஆகியோர் நுலாசிரியர் மாணிக்கவாசகத்துடனான தமது மறக்கவொண்ணா நினைவுகளை பகிர்ந்துகொண்டனர்.*



*சிறப்புரைகளைத் தொடர்ந்து, வவுனியா தேசிய கல்வியியல் கல்லுரி முன்னைநாள் உப பீடாதிபதி திரு. ந. பார்த்திபன் அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்தி, நூலை வெளியிட்டு வைக்க, வவுனியா கவிதா புத்தக நிலைய உரிமையாளர் திரு. அ. தணிகாசலம் அவர்கள் முதற்பிரதியை பெற்றுக்கொண்டார். பிரமுகர்களும் அவையோரும் மேடைக்கு வரிசையாக அழைக்கப்பட்டு, அனைவருக்கும் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, முப்பரிமாணங்களில் நூல் பற்றிய நோக்குரைகள் ஆரம்பித்தன.*

*நூலின் ஊடகவியல் நோக்கு யாழ் பல்கலைகழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. இரகுராம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. திரு. மாணிக்கவாசகம்*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

# ஈழத்தமிழர் இறைமையையும் தன்னாட்சியையும் மீள்விக்க இன்று என்ன செய்ய வேண்டும்

இன்று ஈழத்தமிழர்கள் மேல் பௌத்த மதவெறியையும் சிங்கள இனவெறியையும் தூண்டி அவர்களை மற்றொரு பாரிய இனஅழிப்புக்கு உட்படுத்த ரணில் விக்கிரமசிங்காவின் இன்றைய அரசு வேகமாகச் செயற்பட்டு வருகிறது. இதனை ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா "நாட்டில் ஒவ்வொரு முறையும் திவாலாகிப் போகும் அரசாங்கங்கள் தாம் அரசியலில் தொங்குவதற்கான கடைசித் துருப்புச் சீட்டாக இனவாதம் மதவாதத்தைக் கையில் எடுப்பது வழமை. இப்பொழுதும் நிராகரிக்கப்பட்ட மகிந்த ராசபக்ச, கோட்டபாய ராசபக்ச குழுவினரும் ரணில் விக்கிரமசிங்காவும் அதனை மீளவும் கையில் எடுக்கின்றனர்" எனச் செய்தியாளர் சந்திப்பில் 31.05.2023 இல் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரணில் அரசு மீளவும் ஈழத்தமிழர்களின் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொன்றழிக்கும் சிங்கள பௌத்த பேரினவாத இனப்படுகொலைத் திட்டத்தை தொடங்கியுள்ளதோ எனச் சந்தேகப்படத் தக்க வகையில் 02.06. 2023இல் தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களை மருதங்கேணியில் மக்கள் சந்திப்பில் இருந்த பொழுது சிறிலங்காப் புலனாய்வுத்துறையினர் இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து பிஸ்டல் துப்பாக்கியால் கொல்ல முயற்சித்துள்ளனர். பாதுகாப்புக்குப் பொலிசாரை அழைத்த பொழுது அவர்கள் வந்து பாராளுமன்ற உறுப்பினரைத் தாக்கி அவமதிப்பாகப் பேசியதும் அல்லாமல் கொலைசெய்ய முயன்றவர்களுடன் சமரசமாகி புகார் செய்யாது விடும்படியும் வற்புறுத்தி குற்றம் செய்ய முயன்றர்வர்களைப் பாதுகாக்கவும் செய்துள்ளனர். இது ஈழத்தமிழர்களுக்குச் சிறிலங்காவின் சட்டத்தின் ஆட்சி என்பது அவர்களை இனப்படுகொலை செய்பவர்களைக் காக்கும் கரமாக உள்ளதென்ற உண்மையை உலகுக்கு மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதோ அல்லது குடியொப்ப முயற்சிகளோ எதுவுமே ஈழத்தமிழர் தேசிய பிரச்சினைக்கான தீர்வைத் தராது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் யாழ்ப்பாண நூலக எரிப்பின் 42வது நினைவேந்தலில் குடியொப்பம் நடத்தப்படுவதற்கான பாதுகாப்பான சூழலேயில்லாத நேரத்தில் குடியொப்பத்தை கோரியுள்ளமை அரசியல்வாதிகள் நடைமுறை அரசியலைக் கவனத்தில் எடுக்காது பேசி மேலும் சிக்கல்களை உருவாக்குவதற்கு உதாரணமாகியுள்ளது என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் இனஅழிப்பு சட்டப்பாதுகாப்பு இன்மை என்பனவற்றுக்கு உள்ளாவதற்கு ஒரேகாரணம் ஈழத்தமிழர்களின் உள்ளக வெளியக தன்னாட்சி உரிமைகளைக் கொழும்பு அதிகாரிகள் மறுப்பதே என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்களின் தெளிந்த முடிபாக உள்ளது. இந்நிலையில் ஈழத்தமிழர் முன்னுள்ள ஈழத்தமிழர் இறைமையையும் தன்னாட்சியையும் மீள்விக்க ஈழத்தமிழர்கள் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு ஒரே பதில் அவர்களின் உள்ளக வெளியக தன்னாட்சிகளை உலகு ஏற்க வைப்பது என்பதாகவே உள்ளது.

இதற்கு முதலில் செய்யப்பட வேண்டியது இன்று ஈழத்தமிழர்களைத் தங்கள் குடிகளென படைபல ஆக்கிரமிப்பு மூலமான அரசியல் பணிவால் உலகுக்கு வெளிப்படுத்தி அவர்களது தாயகத்தை ஆக்கிரமித்து அவர்களைப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை மூலம் தொடர்ந்து இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு செய்வதைத் தனது அரசியல் கொள்கையாகவும் அரசியல் கோட்பாடாகவும் கொண்ட சிறிலங்காவின் ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் எந்த முறையாலும் ஈழத்தமிழர்களுடைய உயிர்களையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாக்கும் ஒரு வெளிப்படையான மனித உரிமைகளைப் பேணும் நல்லாட்சியை என்றுமே தரவியலாது என்பதை ஈழத்தமிழர்கள் தேசமாக ஒருங்கிணைந்து எழுந்து உலகிற்கு சான்றாதரங்களுடன் வெளிப்படுத்த வேண்டும்.

இதனால் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத தன்னாட்சி உரிமையினைப் பயன்படுத்தித் தங்களைத் தாங்களே ஆள இயலாத நாட்டெல்லையில் ஈழத்தமிழர்கள் 1948 முதல் இன்று வரை 75 ஆண்டுகள் வாழ்ந்து இனஅழிப்புக்குள்ளாகி வருகின்றார்கள் என்பதை உலகத் தமிழர்களாக உள்ள ஈழத்தமிழர்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கும், தாங்கள் வாழும் நாடுகளின் அரசுக்களுக்கும் ஈழத்தமிழர் மக்கள் சபைகள் மூலம் திட்டமிட்ட முறையில் சான்றுகளை வகுத்துத் தொகுத்து ஒழுங்குபடுத்தி ஒரணியாக எடுத்துரைக்க வேண்டும்.

கூடவே ஈழத்தமிழர்களின் சமகால அரசியல் வரலாறு குறித்து விளக்கமாகத் தெளிவுபடுத்துவதின் வழி அவர்களது இறைமையை ஒடுக்கவே ஈழத்தமிழர்களை சிறிலங்கா இனஅழிப்பு செய்கிற தென்பதை உறுதிப்படுத்த வேண்டும். தாயகத்திலும் சரி உலகநாடுகளிலும் சரி ஈழத்தமிழ் இளையவர்களுக்கு அவர்கள் வரலாற்றுத் தெளிவுடன் உரையாடுவதற்கான அறிவூட்டல் இவ்விடத்தில் அவசியமாகிறது. அவ்வாறே உலகத் தமிழர்கள் தங்களின் நாளாந்த வாழ்வின் பிரச்சினையாகத் தாயக மக்களின் பிரச்சினையைக் கருதவும் அதனை மாற்றச் செயற்படவும் பழக்கப்படுத்த வேண்டும். வெட்டிப் பேச்சால் எதுவும் செய்ய முடியாது. உலக நடப்புகளுக்கு ஏற்ப தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கான பயிற்றுவிப்புக்கள் அவசியம். உதாரணமாக அமெரிக்காவுடன் தொடர்பு கொள்வதானால் அமெரிக்காவின் இன்றைய நிலை குறித்து நமக்கு நாமே அறிவூட்டிக் கொள்ள வேண்டும். அமெரிக்க அரசு இவ்வாண்டு சனவரி மாதத்திலேயே தனது கடன்படுவதற்கான உச்ச வரம்பான 31.38 டிரில்லியனை அடைந்து விட்ட நிலையில் கடன் உச்சவரம்பை நீக்கி நாடு வங்குரோத்துக்குள் செல்லாது தடுப்பதற்கு அமெரிக்க அரசு அதிபர் ஜோ பைடன் அமெரிக்கப் பாராளுமன்றத்திலும் செனட்சபையிலும் எடுத்த முயற்சிகள் இருசபைகளிலும் 317 ஆதரவு 117 எதிர், 63ஆதரவு 36 எதிர் என்ற நிலையில் சில நிபந்தனைகளுடன் 2025 வரை கடன் எல்லையை நீக்குவதற்குரிய அனுமதியைப் பெற்றுள்ளது. இதனால் அமெரிக்காவின் படுகடன் அளவு மேலும் அதிகரிக்கும் பொழுது அதன் உற்பத்தியினையும் அனைத்துலக வர்த்தகத்தையும் தனக்குச் சாதகமான முறையில் முன்னெடுப்பது நடைமுறையாக மாறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இதனால் இந்துமாக்கடல் மீதான ஆட்களதும் பொருட்களதும் சுதந்திரமான நகர்வுகளை உறுதிப்படுத்தும் தேவையில் அமெரிக்கா அதிக அக்கறை செலுத்த வேண்டி வருகையில் இலங்கைத் தீவின் இந்துமாக்கடல் பகுதியில் மூன்றில் இரண்டு பகுதியைத் தனதாகக் கொண்டுள்ள ஈழத்தமிழர்களின் இறைமையை அமெரிக்கா மீள் உறுதி செய்வதன் மூலம் வேகமாக உருவாகி வரும் இன்றைய உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறையில் அமெரிக்காவால் இந்துமாக்கடலின் மேலான ஆட்களதும் பொருட்களதும் சுதந்திரமான நகர்வை பலப்படுத்தலாம் என்பதை உலகத் தமிழராக உள்ள ஈழத்தமிழர்கள் அமெரிக்காவுக்கு எடுத்துச் சொல்லும் உரையாடல்களை விரைவில் தொடங்க வேண்டும்.


இவ்வாறே அனைத்துலக நாடுகளின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக பரிணாமங்களை விளங்கி, உரிய நேரத்தில் உரிய முறையில் ஈழத்தமிழர்கள் தங்கள் தாயகத்தின் இருப்பின் முக்கியத் துவத்தை அறிவார்ந்த முறையில் முன்வைத்தால்தான் உலக மக்கள் என்ற நிலையில் ஈழத்தமிழர்களின் இறைமையையும் தன்னாட்சி உரிமையையும் மீள் உறுதிப்படுத்தலும் நடைமுறைச் சாத்தியமாகும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# ஊடகங்கள் மீதான கெடுபிடி;

# ரணிலின் நோக்கம் என்ன?

அகிலன்



அடுத்தடுத்து ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இலக்கு வைக்கப்படுகின்றார்கள். கொழும்பு அரசியலை கடந்த வாரம் பரபரப்பாக்கிக்கொண்டிருக்கும் செய்திகள் இவைதான். பௌத்த மதத்தை நிந்தனை செய்தார்கள் என இரு சமூக ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இருவருமே சமூகத்தில் மிகவும் பேசப்படுபவர்கள். தனிப்பட்ட சமூக ஊடகவியலாளர்கள், அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் அவதானமாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டிருப்பதாகவே தெரி கின்றது. இதன் பின்னி என்ன? நாட்டின் பொருளாதார நிலை முன்னேற்றமடைந்துவருவதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், ஊடகங்கள் மீது மறைமுகமாக அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான உபாயங்களை அரசாங்கம் மிகவும் நுட்பமாக வகுத்துவருகின்றது. பொருளாதார நெருக்கடி பெருமளவுக்குத் தீர்ந்துவிட்டதாக ஒரு தோற்றப்பாடு காட்டப்படுகின்ற போதலும், அரசாங்கம் தாண்டிச் செல்ல வேண்டிய பிரதான தடைகள் இன்னும் இரண்டு இருக்கின்றன. அந்த இரண்டு தடைகளும் அரசாங்கத்தை உறுத்திக்கொண்டுள்ள நிலையில் தான், ஊடகங்களின் பக்கம் அரசின் கவனம் திரும்பியிருக்கின்றது.

அரசாங்கம் தாண்ட வேண்டிய தடைகளில் முதலாவது, ஐ.எம்.எப். முன்வைத்த நிபந்தனைகளில் பெரும்பாலானவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அவற்றை நிறைவேற்றாமல், முழுஅளவிலான உதவியை ஐ.எம்.எப். அமைப்பிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. இரண்டு - உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு இன்னும் செய்யப்படவில்லை. இதற்காக தம்மிடமுள்ள திட்டம் என்ன என்பதையும் அரசாங்கம் பகிரங்கப்படுத்தவில்லை. இந்த இரண்டு விடயங்களையும் செயற்படுத்த முற்படும் போது மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்படக்கூடும். அதனால்தான் அரசாங்கம் அவ்விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் தயக்கம் காட்டுகின்றது. ஆனால், இந்த இரண்டையும் தாண்டாமல் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியாது என்பதை ஐ.எம்.எப். சொல்லியிருக்கின்றது.

மக்கள் மத்தியில் உருவாகக்கூடிய கொந்தளிப்பை கட்டுப்படுத்த வேண்டுமானால், ஊடகங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். மக்கள் கிளர்ச்சியைத் தூண்டிவிடுவதில் சமூக ஊடகங்களும், இலத்திரனியல் ஊடகங்களும் பிரதான பங்கை வகித்துள்ளன. கடந்த வருடம் "கோட்டா கோ கம" என்று ஆரம்பமான போராட்டத்திலும் ஊடகங்களின் பங்கு பிரதானமாக இருந்தது. இவற்றைக் கவனத்தில் எடுத்துதான் ரணில் விக்கிரமசிங்க அரசு, ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சில உபாயங்களை வகுத்ததற்காகத்தான் அந்தக் கைதுகளும், அவர்கள் தொடர்பாக புனையப்பட்ட செய்திகளும். இதன் பின்னணியில் முக்கியமான நகர்வு ஒன்றை அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றது.

அதில் முக்கியமானது - இலத்திரனியல் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பான அறிவித்தல் சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே, அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு எதிர்க்கட்சிகளும் சிவில் அமைப்புகளும் எதிர்ப்புகளை வெளியிட்டுள்ளன. ஆனால், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும், தாம் நினைத்ததை எவ்வாறு சாதிப்பது என்பது ரணிலுக்குத் தெரியும்.

இந்த ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்ட வரைவு ஒன்றை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை உபகுழு தயாரித்திருக்கின்றது. இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பாக – அவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் பாரதூரமான விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. இந்த சட்டவரைவின் பிரகாரம் ஐவர் கொண்ட ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அமைக்கப்படும்.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளரும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளரும் இந்த ஆணைக்குழுவில் நியமிக்கப்படுவர். ஏனைய மூன்று உறுப்பினர்களை அரசமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஜனாதிபதி நியமிப்பார். இவர்களில் ஒருவரை தலைவர் பதவிக்கு நியமிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இலத்திரனியல் ஊடகங்களின் செயல்பாடுகளுக்கு பாரதூரமான வகையில் அழுத்தம் கொடுக்கக்கூடிய விடயங்களும் ஆணைக்குழுவின் விடயதானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பு சட்டம், அமை திருப்பாகத் தெரிகின்றது.

பௌத்த மதத்தை நிந்தித்ததாக கூறி இரண்டு சமூக ஊடகவியலாளர்கள் கடந்த வாரம் அதிரடியாகக் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதன் மூலம் சிங்கள – பௌத்த கடும் போக்காளர்களின் ஆதரவைத் தக்கவைக்க அரசாங்கம் முற்படுகின்றது. செய்திகளில் இதனை பெருமெடுப்பில் வெளிப்படுத்தி, இவ்வாறு சுயாதீனப் போக்கில் செயற்படும் ஊடகங்களைக் கட்டுப் படுத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்கின்றது. ஊடகங்களுக்கு எதிராகக் கொண்டுவருவதற்கு உத்தேசித்துள்ள கெடுபிடிகளை நியாயப்படுத்துவதற்கு, அவர்கள் பௌத்த மத நிந்தனைகளில் ஈடுபடுகின்றார்கள் என்பதை காண்பிக்க அரசாங்கம் முற்படுகின்றது.

திக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஒளிபரப்பு சேவைகள் முன்னெடுக்கப்படுவதை ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவே உறுதி செய்ய வேண்டியுள்ளது. தேசிய பொருளாதாரத்துக்கு அழுத்தம் ஏற்பாடாத வகையில், ஒளிபரப்பு சேவைகளை பேணிச் செல்வதும் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். மக்களுக்கு உண்மையான மற்றும் சரியான தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதையும் ஆணைக்குழு உறுதிப்படுத்த வேண்டும் என இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒளிபரப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் அதிகாரத்தையும் இலத்திரனியல் ஒளிபரப்பு சேவை ஒழுங்குபடுத் தும் அதிகாரத்தையும் புதிய ஆணைக்குழுவிற்கு வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. சமூக, கலாசார பெறுமதிகள் பாதுகாக்கப்படும் வகையில், மக்கள் மத்தியில் உளநல, ஆன்மீக பண்புகளை மேம்படுத்துவதற்காக ஆணைக்குழு இலத்திரனியல் ஊடகங்களுக்கான வழிகாட்டுதல்களை தயாரிக்க வேண்டியுள்ளது.

இதனைத் தவிர, அனுமதிப்பத்திரமுடைய ஒளிபரப்பாளர்களுடன் கலந்துரையாடி ஒழுக்கக் கோவை ஒன்றை தயாரிக்கும் அதிகாரமும் உத்தேச ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவுள்ளது.

முறைப்பாடு இருந்தாலும் - இல்லாவிட்டாலும் இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரம் இந்த குழுவுக்கு வழங்கப்படவுள்ளது. மத, இன ரீதியிலான மோதல்களுக்கு காரணமாக அமையும், தேசிய பொருளாதாரத்துக்கு அழுத்தம் ஏற்படுத்தும், தேசிய பாதுகாப்பில் தாக்கம் செலுத்தும் செயல்பாட்டை ஒளிபரப்பு அனுமதிப்பத்திரமுள்ள ஒருவர் மேற்கொண்டால், முறைப்பாடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் விசாரணையை ஆரம்பிக்கும் அதிகாரம் விசாரணைக்குழுவுக்கு வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில் ஒளிபரப்பை தடை செய்வதற்கான அதிகாரமும் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய போராட்டங்கள் மக்கள் கிளர்ச்சிகள் என்பவற்றை இலத்திரனியல் ஊடகங்கள் ஒளிபரப்புவதற்கு கட்டுப்பாடுகளைப் போடுவதுதான் இதன் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகின்றது. பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய, தேசிய பாதுகாப்பைப் பாதிக்கக்கூடிய விடயங்கள் என்ன என்பதை அரசாங்கமே தீர்மானிக்கப்போகின்றது. ஆக, ஊடக சுதந்திரத்துக்கு - கருத்துச் சுதந்திரத்துக்கு வைக்கப்படும் ஆப்பு இது.

இது குறித்து அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்து கேலிக்குரியது. "ஒளிபரப்பு அதிகாரசபை சட்டத்தை கொண்டுவருவதன் மூலம் ஊடகங்களையோ சமூக ஊடகங்களையோ கட்டுப்படுத்த முடியாது. மாறாக ஊடகங்கள் மேற்கொண்டு செல்லும் நடவடிக்கையை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்க யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட 42வது ஆண்டு



இன்று ஆசியாவில் 2வது பெரிய நூலகம் என 1981இல் திகழ்ந்து கொண்டிருந்த யாழ்ப்பாண நூலகத்தைச் சிறிலங்கா அரசாங்கம் அரசபயங்கரவாதத்தின் மூலம் எரித்தழித்துப் பண்பாட்டு இனஅழிப்பை நடாத்திய 42வது ஆண்டு நினைவேந்தல் நாள்.



சிறிலங்காவின் அக்கால ஐக்கிய தேசியக் கட்சியின் கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூவும், காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் லலித்அத்துலத்முதலியும்இவர்களால்தேர்ந்தெடுக் கப்பட்ட 300 பொலிசாருடன் 1981ம் ஆண்டு யூன் மாதம் 4ம் திகதிய யாழ்ப்பாண மாவட்டசபை தேர்தலுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தவென மே மாதம் 31ம் நாள் யாழ்ப்பாணம் வந்தடைந்து யாழப்பாண நூலகத்துக்கு பக்கமாக இருந்த துரையப்பா விளையாட்டரங்கில் முகாமிட்டனர்.



. இவர்களால் தேர்தல் அலுவலர்களாகத் தேர்தல் திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட 150 அதிகாரிகள் தடுக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக இவர்களால் தாக்குதல் பயிற்சிகள் அளிக்கப்பட்ட 150 சிங்களக் காடையர்கள் தேர்தல் அலுவலகர்களாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப் ட்டிருந்தனர். இந்தப் பின்னணியில் இந்த இரு அமைச்சர்களும் நெறிப்படுத்த 1981 மே மாதம் 31ம் நாள் நள்ளிரவு தாண்டி யூன் மாதம் 1ம் நாள் தொடங்கியதும் மிகப்பெரிய அழகான கட்டடிடக்கலையமைப்புடன் விளங்கிய 90000 நூல்கைளக் கொண்டதும் கேட்போர் கூடம் சிறுவர் நூலகப் பகுதி ஆகியனவற்றைக் கொண்டதுமான யாழ்ப்பாண நூலகம் சிங்களக் காடையர்களால் எரியூட்டப்பப்பட்டது.

தீயை அணைக்க விரைந்து ஓடி வந்த பொதுமக்களைச் சிறிலங்காப் பொலிசார் எரிகின்ற கட்டிடத்தை நெருங்கவிடாது அடித்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் கலைத்துத் துரத்தினர். இதனால் ஈழத்தமிழர்களுக்கு மட்டு மல்ல தமிழகம் உட்பட்ட உலகத் தமிழர்களுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக் கலாச்சார நகரமாக விளங்கிய யாழ்ப்பாணத்தின் மீது சிறிலங்காக அரச பயங்கரவாதத்தின் முதல் தீ வைக்கப்பட்டதும் அல்லாமல் அடுத்து வந்த மூன்று நாட்களிலும் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிவேலு யோகேஸ்வரனின் இல்லம் எரிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரே உயிர் பிழைக்க அனைத்தையும் இழந்து வீட்டுப் பின் மதில் பாய்ந்து ஓடி ஈழத்தமிழர்கள் அரசியல் புகலிடம் கேட்டு ஓடத் தொடங்கும்' வரலாறும் தொடக்கமுற்றது.

**பற்றிமாகரன்**



கூடவே யாழ்ப்பாண நன்னகரின் 100 கடைகள் உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப் பட்டதும் அல்லாமல் மரபுநிலை வர்த்தகம் செய்த கடைகள் எரித்தும் அழிக்கப்பட்டன. இவ்வாறு ஈழத்தமிழர்களின் இந்த மண் எங்களின் சொந்த மண் என்கிற அவர்களின் இறைமையை ஒடுக்கி அவர்கள் தங்களுடைய வாழ்வையும் அரசியல் எதிர்காலத்தையும் தாங்களே அமைத்து வாழ்வதற்கான அவர்களின் தன்னாட்சி உரிமையையும் படைபலத்தாலும் அரசபயங்கரவாதத்தாலும் அழிக்கும் மக்கள் மேலான யுத்தத்தையும் சிறிலங்கா கட்டவிழ்த்து விட்ட 42வது ஆண்டில் ஈழத்தமிழ் மக்கள் தங்கள் உயிரையும் உடலையும் உடமைகளையும் பாதுகாக்கத் தாங்கள் ஆயுத எதிர்ப்பை வெளிப் படுத்தி தங்களுக்கான நடைமுறையரசை 1978 முதல் கட்டமைக்கத் தொடங்கியதற்கு இனங் காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி மக்களைப் பழிவாங்கும் செயலாகச் சிறிலங்கா இந்த மக்கள் மேலான யுத்தத்தையும் பண்பாட்டு இன அழிப்பையும் நடாத்தியது என்பதே வரலாறு கூறும் உண்மையாக உள்ளது. ஆயினும் இன்று 42 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் ஈழத்தமிழகத்தில் இன்னமும் பண்பாட்டு இனஅழிப்பு சிறிலங்காவால் தொடர்ந்த வண்ணமே உள்ளதைப் பௌத்த விகாரைகளைத் தமிழரின் தனியார் நிலங்களிலும் சைவ கிறிஸ்தவ ஆலயங்களுக்கு அருகிலும் சிறிலங்கா அமைத்து வருவது தெளிவாக்குகிறது.

1981 இல் யாழ்ப்பாண நூலக எரிப்புக்குத் தலைமைதாங்கிய ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் சிறில் மத்தியூ அவ்வாண்டில் எழுதிய *Sinhala People – Awake, Arise, Safe Guard Buddhism* என்னும் நூலே புத்த புனிதத் தலங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன அவற்றை மீட்க சிங்களவர்கள் முஸ்லீம்கள் புனிதப் போர் ஜிகாத்தை செய்வது போல பௌத்தத்தைப் பாதுகாக்க யாழ்ப்பாணத்தின் மேல் புனிதப்போர் தொடங்க வேண்டுமென சிங்கள பௌத்த பேரினவாதத் தீயைச் சுடர்விட்டு எரிய வைத்ததும் அல்லாமல் இவரே 1983 ஆடி ஈழத்தமிழின அழிப்புக்குத் தலைமைதாங்கி கொழும்பு உட்பட வடக்கு கிழக்குக்கு வெளியே தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் ஈழத்தமிழர்களை இனஅழிப்பு செய்வித்தார் என்பது வரலாறு.



லலித் அத்துலத் முதலியும் பாதுகாப்பு அமைச்சராகத் தமிழர் தாயகத்தின் மேலும் ஈழத் தமிழ் மக்கள் மேலும் மக்கள் மேலான யுத்தத்தை வளர்த்து ஈழத்தமிழர்களை இனஅழிப்பு செய்தார் என்பதும் வரலாறு. இந்நிலையில் இன்று 42 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் ஈழத்தமிழரின் இறைமைக்கான பாதுகாப்பும் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி வாழ்வதற்கு உத்தரவாதமும் இல்லாத நிலையில் ஈழத்தமிழர்கள் உயிருக்கான இனங்காணக் கூடிய அச்சுறுத்தல இன்னமும் தொடர்வதை உலகத் தமிழர்களாக இன்று உலகின் பலம்வாய்ந்த கட்டமைப்பான புலம் பதிந்து வாழும் தமிழர்கள் எவ்வளவு காலத்திற்கு அனுமதிக்கப் போகின்றார்கள் என்பதே இன்று எம்முன்னுள்ள கேள்வி?

• • •

### துப்பாக்கியால் இல ... தொடர்ச்சி...

கிடைக்கப்பட்ட அறிக்கைகளின்படி, இன்று வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மக்கள் சந்திப்பினை மேற்கொண்டிருந்த திரு. கஜேந்திரகுமார் மீது உந்துருளியில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முயன்றுள்ளனர். அங்கு திரண்டிருந்த மக்கள் இவ்விருவரையும் துரத்திப் பிடிக்க முயன்றபோது ஒருவர் தப்பியோடிவிட மற்றவர் பிடிக்கப்பட்டார். பிடிபட்ட நபர் தன்னை சிறிலங்கா பாதுகாப்பு படைகளின் உளவுப்பிரிவைச் சேர்ந்தவராக அடையாளப் படுத்தியுள்ளார்

திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான கொலை முயற்சியை ஈழத்தமிழர் பேரவை – ஐக்கிய இராட்சியம் மிகவன்மையாகக் கண்டிப்பதுடன், இவ்வாறான ஜனநாயக விரோதமான மனிதவுரிமை மீறல்களுக்கு இடமளிக்கவேண்டாம் என சிறிலங்கா அரசுக்கு அழுத்தங்கொடுக்குமாறு சிறிலங்காவிற்கு உதவும் நாடுகளைக் கோருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீனவர் பிரச்சனைகள் குறித்து அரசாங்கம் தலையிட வேண்டும்– தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்



**வடக்கு கிழக்கில் தமிழ் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து முல்லைத் தீவு மாவட்ட வட்டுவாகல் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவர் செல்லையா யோகேந்திரராசா மற்றும் திருகோணமலை மாவட்ட கிண்ணியா மீனவர் மகா சங்கத்தின் தலைவர் ஏக்கூப் றிஜாஸ் பாயிஸ் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய செவ்வி**

**இலங்கையின் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு பகுதிகளில் இந்திய மற்றும் சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்புக்களால் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப் படைவது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

பாரிய சவால்களை எதிர்நோக்குவதுடன் தமிழர்களின் பொருளாதாரம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் நாங்கள் பாதிக் கப்பட்டுள்ளோம் .இந்திய மீனவர்களை போன்று தென்னிலங்கை மீனவர்களும் சட்ட விரோதமாக எவ்வித அனுமதியும் இன்றி மீனவத் தொழிலில் முல்லைத் தீவில் ஈடுபடுகிறார்கள்.

பதிவுகளற்ற முறையில் 75 தொடக்கம் 80 குடும்பங்களைச் சேர்ந்த மீனவர்களே அனுமதி பெற்றிருந்தாலும் சுமார் 200,300வரையான மீனவர் கள் படகில் மீனவத் தொழிலை முன்னெடுக் கிறார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு மாதகாலம் தென்னிலங்கையில் ஆறுமாத காலம் என தொழில்களை அவர்கள் செய்கிறார்கள். இதனால் தமிழர் பகுதி மீனவர்களாகிய நாங்கள் சொந்த இடங்களில் தொழில் செய்ய முடியாத நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எங்கள் பகுதியில் கடல் தீர்த்தம் என்றால் தொழிலின்றியே இருப்போம். நாங்கள் வீச்சு வலையை நம்பிய மீனவர்களாக இருக்கிறோம். இந்த சூழ் நிலையில் இந்திய மீனவர்கள் பெரும் படகுகளில் வந்து மீன் பிடியில் அத்து மீறி எமது எல்லைக்குள் ஈடுபடுகின்றனர். இது தொடர்பில் பெரும் போராட்டங்களை நடத்திய போதும் பலன் இல்லை.

**நந்திக்கடல் பகுதியில் சட்டமுரணான மீன் பிடி நடவடிக்கைகளை தென்னிலங்கை மீனவர்கள் மேற்கொள்வதாக கூறப்படு கின்றதே இதை தடுப்பதற்கு ஏதாவது நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?**

இந்த செயற்பாட்டை முழுமையாக தடை செய்வதற்காக பல வழிகளில் முயற்சி செய்து வருகிறோம். ஆனாலும் முடியவில்லை. இதனை உரிய திணைக்களமான மீன்பிடி திணைக்களம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் இவ்வாறான பிரச்சி னைகள் மீனவக் குடும்பங்களாகிய எங்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. கடற்படை இதனை தீர்ப்பதாக இல்லை. அவர்கள் சொல்வது மீனவத் திணைக்களம் தான் இதனை பார்க்க வேண்டும் என்று. இப்போது கூட கலந்துரையாடலுக்கு அழைத்தால் நாங்கள் தயார். ஆனால் கடல் தொழில் திணைக்களம் இதில் பின்னடிப்பு செய்து வருகின்றது. பத்து நாட்களுக்கு முன்னர் கூட்டமொன்றுக்கு சென்றிருந்தோம். ஆனால் இதற்கான எவ்விதமான சாதகமான தீர்வு களும் எட்டவில்லை.

**இந்திய மீனவர்களின் எல்லை கடக்கும் பிரச்சனைக்கு ஏன் இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லையென நினைக்கின்றீர்கள்?**

அரசாங்கம் தான் இதற்கு பொறுப்பு சொல்ல வேண்டும். இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை என்பது அரசாங்கத்துக்கு சிறிய பிரச்சினை. இதனை அரசாங்கம் தான் பார்க்க வேண்டும். தமிழர்களின் மீனவத் தொழில் பாதிக்கப்படுவதையும் வளங்கள் அழிக்கப்படுவதையும் அரசாங்கமே நிறுத்த வேண்டும். இரு பக்கமும் பிரச்சினைகளாக உள்ளன. இந்திய இலங்கை மீனவச் சமூகங்களின் பிரச்சினைகள் சுமூகமாக தீர்க்கப்பட வேண் டியதொன்றாகும். புத்தளம் உள்ளிட்ட பல இடங்களிலும் இந்திய மீனவர்கள் இங்கு தொழில் செய்கிறார்கள். இதனால் எமது வளம் அழிக்கப்படுவதுடன் வாழ்வாதாரமும் பாதிக்கப் படுகிறது.

**இந்நிலையில், கிழக்கு மாகாணத்தின் மீனவர் பிரச்சனைகள் குறித்து ஏக்கூப் றிஜாஸ் பாயிஸ் கருத்து தெரிவிக்கையில்..**

வளங்களில் கடல் வளம் என்பது இலங்கையை பொறுத்தமட்டில் முக்கியமான தொன்றாக காணப்படுகிறது கடல் தொழிலாளர்கள் பலர் தங்களது தொழில்களை முன்னெடுத்து வந்தாலும் அன்றாட ஜீவனாம்ச தொழிலாக மீனவத் தொழிலும் காணப்படுகிறது. இதில் பல்வேறுபட்ட துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வட கிழக்கு மீனவர்களின் குறிப்பாக சிறுபான்மை இன மீனவர்கள் பல இன்னல்களை சந்தித்து வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

கிழக்கு மாகாண மீனவர்கள் முகங் கொடுக்கும் பிரச்சனைகள் குறித்து மேலும் கூறுகை யில், கிழக்கு மாகாணம் மிக நீண்ட கடல் எல்லையை தன்னகத்தே கொண்டிருக்கிறது.

இங்கு வாழ்கின்ற மக்களில் பெரும் பான்மையானோர் கடற்றொழிலை தமது ஜீவனோ பாயமாக கொண்டிருக்கின்றனர்.

இம்மீனவர்கள் தொழிலை செய்வதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை தேடிக் கொள் வதிலே பல்வேறு இன்னல்களுக்கும் பிரச்சினை களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

தம்மால் தேடக்கூடிய வருமானத்தைக் கொண்டு தமது குடும்பத்தின் அன்றாடத் தேவை களை நிறைவேற்ற முடியாது தவிக்கின்றனர்.

மூலப் பொருட்களினதும் கருவிகளினதும் எரிபொருட்களினதும் இமாலய விலையேற்றம் மீனவர்களை வதைக்கின்றது.

தங்களது கடன் எல்லை அதிகரித்துச் செல்வதனால் தொடர்ச்சியாக பொருட்களை பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

இன்னும் மரபு ரீதியான பொறிமுறையில் மீன்களை பிடிக்கும் இவர்களுக்கு நவீன தொழில் நுட்பமோ நவீன கருவிகளோ இல்லாமல் இருப் பது பாரியதொரு சவாலாகும்.

தற்போது அடிக்கடி உண்டாகும் இயற்கை யின் சீற்றத்தினாலும் காலநிலை மாற்றத்தினாலும் எதிர் பார்க்கப் படுகின்ற அறுவடையை பெற்றுக் கொளள முடியாமல் தவிக்கின்றனர்.

தென்பகுதி மீனவர்களின் அரசியல் அதி காரத்துடனான ஆதிக்கத்துடனும் நவீன கருவி களுடனும் இந்த ஏழை மீனவர்கள் எதிர்த்து நிற்க முடியாத காரணத்தினால் இவர்களின் மீன் வளங் கள் சூறையாடப் படுகின்றது.

எரிவாயுக் கசிவுகள் தொழிற்சாலைக் கழிவு கள் குப்பைகள் பொலித்தீன்களினால் மீன்கள் இறந்து மிதக்கின்றன.

இந்திய மீனவர்களின் எல்லை மீறிய செயற்பாடுகளை இல்லாமல் செய்வதற்காக அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்காமையினால் எப்போதும் கைது செய்யப்படுவதும் இயந்திரங்கள் பறிமுதல் செய்யப் படுவதும் சண்டையிடுவதும் தொடர் கதையாகி மாபெரும் இன்னல்களுக்கு ஆளாக வேண்டி வருகின்றது.

சிறிய படகுகளை கொண்டு மீன்பிடித் தொழிலை செய்கின்ற இம்மீனவர்களுக்கு முறையான மீன்பிடி துறைமுகங்கள் அமைத்துக் கொடுக்காமையானது இம்மீனவர்களின் தொழிலை மிகவும் கடுமையாக பாதிக்கின்றது.

புல்மோட்டை, இறக்கக் கண்டி, நிலாவெளி, ஜமாலியா, கிண்ணியா, மூதூர், கட்டை பறிச்சான்,லங்கா பட்டணம் போன்ற பிரதேசங் களில் மிகவும் அவசியமாக மீன் பிடி துறைமுகம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டிய தேவை உணரப்படுகின்றது.

மேலும் மீன்பிடிப்பதற்காக 5 கடல் மைல் தூரங்களுக்கு அப்பால் சென்றுதான் மீன்களை பிடிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் எல்லை நிர்ணயம் சிறிய படகுகளை கொண்டு மீன்பிடிப்பவர்களின் தொழிலுக்கு மிகவும் சவாலாக காணப்படுகின்றது.


குறிப்பிட்ட எல்லைகளுக்கு உள்ளே வருகின்ற மீன்களை பிடிக்கின்ற போது கடற் படையினரால் கைது செய்யப்படுவதும், சிறுபான்மை மக்களால் பிடிக்கப்படுகின்ற மீன்கள் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த மீனவர்களால் பலாத்காரமாக பறிமுதல் செய்யப்படுவதும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படுவதும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதும் மீனவர்களுக்கு தொடர்ந்தும் சவாலாகவே காணப்படுகிறது.

பாராளுமன்றத்திலும் மீன்பிடி திணைக் கலங்களிலும் அமைச்சர்களிடமும் முறைப்பாடுகளை தொடர்ச்சியாக செய்து வருகின்ற இம் மீனவர்களுக்கு இதுவரை எந்த ஒரு நிவாரணங்களும் கிடைக்காமல் தொடர்ச்சியான ஏமாற்றங்களை தந்து கொண்டிருக்கின்றது.

இப்பிரதேச மீனவர்களுக்கு அரசாங்கத் தினால் மானிய அடிப்படையில் எரிபொருட்களை வழங்குவது மற்றும் இலகுவாக எரிபொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# குப்பை மேட்டு ,காட்டு யானை பிரச்சினைகளுக்கு எப்போது நிரந்தர தீர்வு கிட்டும், பலத்த எதிர்பார்ப்புடன் பாலம்போட்டாறு மக்கள்



ஹஸ்பர் ஏ ஹலீம்

எங்களது ஊரில் காட்டு யானைகளின் தொல்லை அதிகம் இதற்கான காரணம் குப்பை மேடுதான். குப்பைகளை கொட்டுவதை நிறுத்தக்கோரி பல ஆர்ப்பாட்டங்கள் செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் இல்லை .பேருந்தில் ஏறுவதற்காக காத்திருக்கும் போது இந்த குப்பைகளின் துர்நாற்றம் தாங்க முடியாது. அது மட்டுமின்றி இங்கு பாதுகாப்பான யானை வேலி இல்லை. இந்த யானைப் பிரச்சினையால் ஊருக்குள் நிம்மதியாக வாழ முடியாது. மாலை 5 மணிக்கே யானை ஊருக்குள் புகுந்து அட்டகாசங்களை மேற்கொள்வதுடன் எங்களது நெற்செய்கை விவசாயம், தோட்டச் செய்கைகளை அழித்து விடுகின்றன. கச்சான் போன்ற பயிர்களையும் துவம்சம் செய்து விட்டு செல்கின்றன. இந்த குப்பைகளை இங்கு கொட்டுவதனால் அங்குள்ள விலங்குகள் அதனை சாப்பிட்டு விட்டு ஊருக்குள் வருவதனாலும் பல தொற்று நோய்களும் ஏற்படுகின்றன. இவ்வாறானவற்றில் இருந்து பாதுகாக்க குப்பை மேட்டை அகற்றி பாதுகாப்பான யானை வேலியினை அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்“ என பாலம்போட்டாறு பத்தினிபுர கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொருளாளர் ஜீ.விதுர்சியா தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.






திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராம சேவகர் பிரிவே பாலம்போட்டாறு. இதில் இக்பால் நகர், பத்தினிபுரம் ஆகிய கிராமங்கள் காணப்படுகிறது. இதனை அண்மித்த கண்டி திருகோணமலை பிரதான வீதியின் சிங்கபுர எனும் பகுதியில் தம்பலகாமம் பிரதேச சபை மூலம் கொட்டப்படும் குப்பைகள் மூலமாக பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக துர்நாற்றம்,இதனை அண்டியே காட்டு யானைகள் படையெடுப்பு போன்றனவும் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.பிரதான வீதியின் அருகே கொட்டப்படும் குப்பைகளால் இவ்வாறு பல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்வதுடன் அவ்வீதி ஊடாக பயணிக்க முடியாத துர்நாற்றம் ஏற்படுவதாகவும் அப் பகுதி கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



கடந்த பல வருட காலமாக இங்கு கழிவு குப்பைகள் கொட்டப்பட்டு குப்பை மேட்டாக மாறியுள்ளது. இங்கு பிரதேச சபை மூலமான குப்பை மட்டுமல்ல வீதியால் செல்லும் தனியார் வாகன போக்குவரத்துதாரிகளும் குப்பைகளை வீதி அருகே கொட்டி விட்டு செல்கின்றனர். இதனால் அதனை தேடி யானைகளும் படையெடுப்பதுடன் குறித்த யானைகள் ஊருக்குள் புகுந்து மக்கள் சொத்துக்களை நாசமாக்கி விட்டு செல்கின்றன. விவசாயத்தை நம்பியே வாழும் இம் மக்களின் தோட்டப் பயிர்ச் செய்கைகளை அழித்து விட்டு செல்வதாகவும் இங்கு வாழும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

“பத்தினிபுர கிராமத்தில் தோட்டச் செய்கையில் அதிகமாக ஈடுபட்டு வருகிறோம் இதனை நம்பியே வாழ்வாதாரத்தை மேற்கொள்கிறோம். ஆனால் யானை தொல்லையால் பெரும் இழப்புக்களை எதிர்நோக்கியுள்ளோம் இதனால் நிரந்தர யானை வேலியினை அமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதாக இருந்தால் அச்சத்துடனேயே அனுப்ப வேண்டியுள்ளது. சுமார் 4கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தம்பலகாமம் பகுதிக்கு பிள்ளைகள் வகுப்புகளுக்கு சென்று வரவேண்டும். இதனால் யானை வந்திடுமோ என்ற பயம் எமக்குள் வீடு வந்து சேரும் வரை மனது படபடக்கிறது. இது இவ்வாறு இருக்க, இப்பகுதியில் ஜெயபுரத்தில் குப்பை மேடு உள்ளது. இதனை அண்டியும் பிரதான வீதியை கடந்தும் எங்கள் ஊருக்குள் யானை வருகிறது. அருகாமை கிராமத்தில் உள்ள விலாங்குளம் பகுதியில் யானை வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டதை போன்று நிரந்தரமான பாதுகாப்பான யானை வேலியினை அமைத்து தாருங்கள் என பாலம்போட்டாறு பத்தினிபுரத்தை சேர்ந்த தோட்டச் செய்கையில் ஈடுபடும் பெண்ணான டி.விஜயபாரதி தனதுஉளக்குமுறல்களைவெளிப்படுத்தியிருந்தார்.



பல வருட காலமாக மக்கள் ஆரம்பம் முதல் இந்த கிராமத்தில் நெற் பயிர்ச் செய்கை,தோட்டச் செய்கைகளான கத்தரி,வெண்டி,மரவள்ளி,கச்சான் உட்பட பல மேட்டு நிலப் பயிர்களையும் செய்து இலாபமீட்டி வருகின்றனர்.

ஆனால் இதனை பாதுகாப்பது அவர்களுக்கு சவாலான விடயமாகவே உள்ளது .தினமும் இந்த யானை தொல்லையால் நிம்மதியாக தூங்கவும் முடியவில்லை.குடியிருப்பு பகுதிக்குள் யானை வருமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. யானை தாக்குதல் மூலமாக கடந்த 2022 ம் ஆண்டில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் இரண்டுக்கும் மேற்பட்ட உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளதுடன் 5க்கும் மேற்பட்ட யானைகளும் உயிரிழந்துள்ளன. காட்டு யானைகளானது குப்பை மேட்டினை நோக்கி பகலிலும் இரவிலும் படையெடுக்கின்றன. இங்கு கொட்டப்படும் குப்பைகளில் பொலித்தின் போன்ற உக்க முடியா பொருட்களும் காணப்படுவதுடன் இதனால் சூழலுக்கும் பாதிப்புற்படுகின்றனது. யானைகளும் இறக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றன. இந்த குப்பைகளால் ஏற்படும் ஒரு வகை துர்நாற்றம் மூலமாக தொற்று நோய்களும் ஏற்படலாம். பிரதான வீதியில் பேருந்து தரிப்பிடத்தில் காத்திருக்க முடியாது. அவ்வளவு துர்நாற்றம் வீசுகிறது. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பல முறை மக்கள் சுட்டிக்காட்டியும் பயனளிக்கவில்லை .பாதுகாப்பற்ற யானை வேலியின்மை மக்களை மேலும் இந்த காட்டு யானை தொல்லை அச்சப்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் 2500 மரவள்ளி நாட்டி அதனை யானைகள் அழித்து விட்டன. இதனால் பாரிய இழப்பு அடைந்துள்ளது. யானைக்கு வெடி வைக்கவா முடியும்? இல்லையே இதனைக் கட்டுப்படுத்தி தாருங்கள். மேலும் குப்பை மேட்டினால் தான் இந்த யானைகள் எங்களது ஊரை நோக்கி ஊருக்குள் படையெடுத்து பயிர் களையும் நாசமாக்குகிறது என விவசாயியான எஸ்.விஜயகுமார் தெரிவித்தார்.



மக்கள் தங்களது உயிரை துச்சமென மதித்து பல போராட்டங்களுக்கு மத்தியில் யானை மனிதன் மோதல் என்ற சவாலுக்குள் முகங்கொடுத்து வாழ்கின்றார்கள். இயற்கை இனங்களின் விலங்கினங்களை பாதுகாப்பதும் பொறுப்பாகவுள்ளது ஆனாலும் இந்த மனித யானை மோதல் முடிவுக்கு வருவதென்பது கடினமான ஒன்றாகும்.

இக் காட்டு யானை தொல்லையில் இருந்து பாதுகாப்பு பெற வேண்டும் என்பதே இப் பிரதேச மக்களின் கோரிக்கையாக உள்ளது. இருந்த போதிலும் பாதுகாப்பான யானை வேலி இன்மை குறைபாடாக உள்ளதுடன் வனஜீவராசிகள் திணைக்களம் மூலமாக அமைக்கப்பட்ட அநேகமான வேலிகள் சேதமாக்கப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பின்றியும் காணப்படுகிறது .

இரவில் குடியிருப்பு பகுதிகளில் பயிரினங்களை பாதுகாப்பதா? நிம்மதியாக தூங்குவதா? என்ற வினா இப் பிரதேச மக்களின் கனவுகளாகவே கலைந்து செல்கின்றது.

தம்பலகாமம் முழுவதுமாக சேரும் கழிவுகளை இங்கு கொட்டுவதனால் அதிகமான

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இறுதிப் பகுதி

# தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்தாளும் சதி 1990இல் ஆர்.பிரமதாசா ஆரம்பித்தார்.!



பா.அரியநேத்திரன்

1990, ஆகஷ்ட் மாதம் வரையும் அம்பாறை மாவட்ட தமிழர்களை பதம்பார்த்த இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் அடுத்த கட்ட நடவடிக்கையாக மட்டக்களப்பு மாவட்டத்தை இலக்கு வைத்து படுகொலைகளை ஆரம்பித்தனர்.

1990, ஆகஷ்ட்,22,ல் சித்தாண்டி கிராமத்தில் சுற்றிவளைப்பு செய்து சுமார் 52, தமிழர்கள் கைது செய்யப்பட்டு கொண்டு சென்றனர் இன்றுவரை என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

அதுபோலவே கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலைகள் அல்லது வந்தாறுமூலை வளாகப் படுகொலைகள் என்பது 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்த தமிழ் அகதிகள் 158 பேர் இலங்கை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் குறிக்கும். அதே மாதம் 23 ஆம் நாள் மேலும் 16 பேர் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர். இலங்கை இராணுவத்தினரே இவர்களைக் கைது செய்ததாக நேரில் கண்ட சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்து 1990 செப்டம்பர் 09 அன்று மட்டக்களப்பு மாவட்டம் சத்துருக்கொண்டான் பகுதியில் தங்கியிருந்த 184 இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கை அரச படைகளால் ஊர்காவல் படையினராலும் படுகொலை செய்யப்பட்ட கொடூரம் ஆகும்.இது தொடர்பாக இலங்கை அரசு இரு விசாரணைக் குழுக்களை அமைத்தும், எவரும் கைது செய்யப்படவில்லை வழமையாக காலம் கடத்தி மூடி மறைக்கப்பட்டது.

இச்சம்பவத்தை விசாரணை செய்த நீதிபதியின் அறிக்கைப்படி 27 வயதான மோகன சுந்தரி எனும் தாயும் அவரது 3 மாதக்குழந்தையும் படையினரால் “மண்ணா” கத்திகளால் சாகும்வரை குத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டனர்.அத்தோடு 5 கைக்குழந்தைகள், 42 பத்துவயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டுள்ளனர்.

இப்படுகொலைகள் குறித்து விசாரணை செய்ய இலங்கை அரசு சனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தது. விசாரணை முடிவுகள் சட்டவிரோதக் கைது மற்றும் படுகொலைகள் இடம்பெற்றுள்ளதை உறுதிப்படுத்தியது. அத்துடன் இதில் சம்பந்தப்பட்டோரையும் அது இனக்கண்டிருந்தது, ஆனாலும் இது குறித்து மேலதிக விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை.

மேலும் 1990,செப்டம்பர்,21,ல் மட்டக்களப்புமாவட்டம்புதுக்குடியிருப்புகிராமத்திற்குள் நள்ளிரவில் உள்நுளைந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் கண்ணுக்கு பட்டவர்களை எல்லாம் கடல்கரை பக்கமாக முந்திரி தோட்டத்தில் வைத்து ஆண் பெண்கள் என 17, பேரை வெட்டியும் சுட்டுக்கொன்றனர்.

இதேவேளை ஆகஸ்ட் 3, 1990ல் கிழக்கிலங்கையில் காத்தான்குடியில் ஆயுதக் குழுவினால் நடத்தப்பட்ட தாக்குதலைக் குறிக்கும். இத்தாக்குதல் ஒரே நேரத்தில் இரண்டு முஸ்லீம் பள்ளிவாசல்களில் நடத்தப்பட்டது. ஒன்று கிரவல் தெருவில் உள்ள பள்ளிவாசலும், மற்றொன்று உசைனியா பள்ளிவாசலும் தாக்குதலுக்குள்ளாயின. இதில் முஸ்லிம்கள் இரவுத்தொழுகை நடாத்திக் கொண்டிருக்கும் பொழுது நடத்தப்பட துப்பாக்கிப் பிரயோகத்தில் 25 குழந்தைகள் உட்பட 103 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அதேபோல் ஏறாவூரில் ஏறாவூர் நகரப்பகுதி, சுரட்டையன்குடா, புன்னைக்குடாவீதி, ஐயன்கேணி, சத்தாம் ஹுஸைன் கிராமம் உள்ளிட்ட இடங்களில் வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தோர் மீது 1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குல்களில், சுமார் 121 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இத்தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர்.என அப்போது கூறப்பட்டாலும் அதனை அவர்கள் எப்போதும் மறுத்தே வந்திருக்கின்றனர்.

இதன் எதிரொலி வடமாகாணத்திலும் இவ்வாறான சம்பவங்கள் நிகழலாம் என்ற நோக்கில் விடுதலைப்புலிகள் யாழ்ப்பாண முஸ்லிம்களை 1990 அக்டோபர் 30 இல் பாதுகாப்பாக வெளியேற்றினர்.வாகனங்களில் வந்திருந்த விடுதலைப் புலிகள் அனைத்து முஸ்லிம்களையும் யாழ்ப்பாணம் ஒசுமானியா கல்லூரியில் கூடும்படி கட்டளை இட்டனர். அங்கு கூடியிருந்தோரை வெளியேறும்படி உத்தரவிட்டனர்.

அதனால் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு,கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் அங்கிருந்தும் பாதுகாப்பாக வெளியேறி புத்தளத்தில் சென்று முஸ்லிம்மக்கள் வாழ்ந்தனர்.

இந்த சம்பவத்தை 2014, ல் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ.சுமந்திரன் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் யாழ்ப்பாண முஸ்லிம்மக்களை விடுதலை புலிகள் வெளியேற்றியதை இனச்சுத்திகரிப்பு என கூறி கண்டித்தார்.

இந்த கருத்தை ஏற்கமுடியாது என மறுநாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பா.அரியநேத்திரன் முஸ்லிம்மக்களை பாதுகாப்பாக வெளியேற்றிய விடயம் இனபாதுகாப்பு எனவும் இனசுத்திகரிப்பு என சுமந்திரன் கூறியது தவறு எனவும் ஊடகங்களில் அறிக்கை விட்டிருந்தார்.

உண்மையில் பிட்டும் தேங்காய் பூவுமாக வர்ணிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுமுறையை இலங்கை அரசாங்கத்தின் பிரித்தாளும் சதி வெற்றிகண்டது.

1990, ஜனாதிபதி ஆர். பிரமதாசாவால் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம் தமிழ் மக்களின் குரோதம் அதற்கு பின்னர் ஜனாதிபதிகளாக இருந்தடி. விஜயதுங்கா,சந்திரிக்கா, மகிந்தராஷபக்ச, மைத்திரிபால சிறிசேனா, தற்போதைய ஜனாதிபதி ரணில் ஆகியோரால் தொடர்ந்தும் பேணப்பட்டுகிறது.

இதன் தொடர்சியாகவே 2009, மே,18, இல் முள்ளிவாய்க்கால் மௌனமும், இலட்சக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், முள்ளுக் கம்பி முகாம்களில் பல இலட்சம் தமிழர்கள் அகதியாக வவுனியாவில் தஞ்சம் அடைந்த போது தென்பகுதி மக்கள் பால்சோறும், கட்டச்சம்பலும் வீதிகளில் வழங்கி மகிழ்ச்சி கொண்டாட்டங்களை நடத்தியபோது வடக்கு கிழக்கில் உள்ள இஷ்லாம் மக்களும் காத்தான்குடி, ஏறாவூர்,ஓட்டமாவடி,கல்முனைகுடி, மருதமுனை, நிந்தவூர், அட்டப்பள்ளம், அக்கரைப்பற்று, மூதூர், கிண்ணியா, புத்தளம் மன்னார், வவுனியா எல்லாம் முஸ்லிம் மக்களில் பலர் பட்டாசு கொழுத்தி பேரீச்சம் பழம் வழங்கி தென்பகுதி சிங்க மக்களுடன் இணைந்து மகிழ்ச்சிகளை காட்டினர், ஆனால் அது தவறு என்பதை ஈஷ்டர் குண்டு தாக்குதல் 2019, ஏப்ரல்,21 ல் இடம்பெற்ற பின்னரே உணர்ந்தனர்.

கல்முனைகுடி, மருதமுனை, நிந்தவூர், அட்டப்பள்ளம், அக்கரைப்பற்று, மூதூர், கிண்ணியா, புத்தளம் மன்னார், வவுனியா எல்லாம் முஸ்லிம் மக்களில் பலர் பட்டாசு கொழுத்தி பேரீச்சம் பழம் வழங்கி தென்பகுதி சிங்க மக்களுடன் இணைந்து மகிழ்ச்சிகளை காட்டினர், ஆனால் அது தவறு என்பதை ஈஷ்டர் குண்டு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமிழர்களின் நிலங்களைப் பறித்து / அபகரித்து சிங்களவர்களுக்கு வழங்குகின்றார்கள்

**மகாவலி L மற்றும் J வலயங்களை அரச திணைக்களங்கள் மூலமாக உருவாக்கிவிட்டு தமிழர்களின் நிலங்களை பறித்து/அபகரித்து சிங்களவர்களுக்கு வழங்குகின்றார்கள்.**

ஏற்கனவே மகாவலி L வலயத்தை முல்லைத் தீவில் திணித்து மணலாறு முழுமையாகவும் கரைதுறைப் பற்று மற்றும் ஒட்டுசுட்டானில் பகுதியாகவும், நீர்ப்பாசன தமிழர்களின் காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை பறித்தெடுத்து சிங்கள மக்களுக்கு வழங்கும் நடவடிக்கை தீவிரமாக நடைபெறுகின்றது.

இப்போது திரும்பவும் J வலயம் என்ற பெயரில் 37 கிராம அலுவலர் பிரிவுகளை பறிக்கும் நோக்கம் செயல்படுத்தப்படுகின்றது.

**அவை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில்**

அம்பாள்புரம், கரும்புள்ளியான், கொல்லவிளாங் குளம், கொம்புமுறிப்பு, நட்டாங்கண்டல், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், பாண்டியன்குளம், செல்வபுரம், சிராட்டிகுளம், சிவபுரம், வன்னி விளாங்குளம், விநாயகபுரம் ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளையும்,

**துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில்,**

அனிஞ்சயன்குளம், பாரதிநகர், புகழேந்திநகர், திருநகர், யோகபுரம் மத்தி, யோகபுரம் கிழக்கு உளளிட்ட ஏழு கிராம அலுவலர் பிரிவுகளையும்

**மாந்தை மேற்கு (மன்னார்) பிரதேச செயலர் பிரிவில்**

பாலிஆறு, அந்தோனியார்புரம் ஆத்திமோட்டை, இலுப்பைக்கடவை, கள்ளியடி, கூறாய், கோயிற் குளம், காயாநகர், பெரியமடு கிழக்கு, பெரியமடு மேற்கு, பள்ளமடு, வெடுத்தல்மடு கிழக்கு, வெடுத்தல் வடக்கு உள்ளடங்கலாக 15 கிராம அலுவலர் பிரிவுகளையும் மொத்தம் 37 கிராம அலுவலர் பிரிவுகள் ஒன்றிணைந்து மகாவலி L வலயம் உருவாக்கப்படவுள்ளது.

நிலத்தினுடைய அபகரிப்புகள் இப்படி பல வடிவங்களில் எமது தமிழர் தாயகத்தில் அரங்கேறிக் கொண்டுவருகின்றது.

மகாவலிஓயா குளத்தினை நிறைவேற்றும் போது வவுனியா வடக்கில் வரும் தமிழர் பூர்வீகக் குளங்களான குளத்தோடு சேர்ந்த காணிகள்

***01. இராமன்குளம்***
***02. கொட்டோடைக்குளம்***
***03. ஓயாமடுக்குளம்***
***04. வெள்ளான்குளம்***
***05. பெரியகட்டுக்குளம்***
***06. பனிக்கல் மடுக்குளம்***
***07. சன்னமுற்றமடுக்குளம்***
***08. கம்மாஞ்சிக்குளம்***
***09. குறிஞ்சாக்குளம்***
***10. புலிக்குட்டிக்குளம்***

முதலான பத்து குளங்கள், சிறிய நீர்ப் பாசனக் குளங்களும் அவற்றின் கீழ்வரும் வயற் காணிகளும், வெடிவைத்தகல்லு குளத்தின் கீழ்வரும் பகுதியளவு வயல்காணிகளும் நாவலர் பாம், கல்லாறுக்குளம், ஈச்சன் குளம், கூழாங்குளம், வயற்காணிகளும் குளத்தின் நீரேந்து பிரதேசத்தில் அகப்பட்டு மூழ்கும்.



முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்
**துரைராசா ரவிகரன்**

**இவற்றால் பயன் அடைவது வெலிஓயா சிங்கள மக்களேயாகும்.**

அதன் பின்னர் குறுளுவெவ குளத்திலிருந்து வவுனியாவிலுள்ள சேமமடு குளத்திற்கு நீரைக் கொண்டுவரும் 74 கிலோமீற்றர் நீள NCP வாய்க்கால் (கூட மத்திய மாகாண வாய்க்கால்) வெட்டப்பட்டு சூரியன் ஆற்றுக்கும் கனகராயன் ஆற்றுக்கும் பறங்கி ஆற்றுக்கும் பேராற்றுக்கும் நீரைக் கொடுப்பதன் ஊடாக சூரியன் ஆறு, கிவுல்ஓயா, கனகராயன் ஆறு, இரணைமடு, பறங்கியாறு – வவுனிக்குளம், பேராறு, முத்தையன்கட்டு ஆகிய குளங்களைக் கையகப்படுத்துவதோடு, அவற்றின் கீழ்வரும் காணிகளையும் கையகப்படுத்தமுடியும். கனகராயன் ஆற்றுக்கு நீரைக் கொண்டுவந்து இரணைமடுக்குளத்தினூடக ஆனையிறவு களப்பில் நீரை விழுத்தி அதனூடாக முள்ளியான் தொடுப்பு வாய்க்காலின் ஊடாக தொண்டமானாறு மற்றும் உப்பாறுக்கு நீரைக் கொண்டுவருவதன் ஊடாக அவ்விடங்களையும் இலகுவாக கைப்பற்றமுடியும். இதன் இறுதியில் வரும் இடமே உப்பாறில் வரும்.

**அப்பன் குடியிருப்பு மேலும் கிவுல்ஓயாத்திட்டமானது,**

***01. மாஓயா/பெரிய ஆறு***
***02. சூரியனாறு***

ஆகிய ஆறுகளை மறித்து கட்டப்படுகின்ற இதன் கீழ் நீர்ப்பாசனக் காணிகளான 6000 ஏக்கர் வழங்கப்படவுள்ளது. இவை மணலாறு எனப்படும் வெலிஓயா பிரதேசத்தில் வரும் சிறு குளங் களை இவை அவற்றின் கீழ்வரும் காணிகளுக்கு நீர் வழங்கப்படவுள்ள மகாவலியிலேயே நீர் பற்றாக்குறை இருக்கும்போது எவ்வாறு இவற்றிற்கு நீர் வருமென தெரியாது.

**மகாவலி**

***மகாவலி அதிகார சபை உருவாக்கம் - 1970.02.28***

***மகாவலி திசை திருப்பும் திட்டம் ஆரம்பம் - 1970.02.28***

***மகாவலி அபிவிருத்தி அதிகார சபை சட்டம் - ((Ac + NO 14) நிறைவேற்றம் - 1970.03.21***

**மகாவலி வலயம்**

முதலாவது வர்த்தமானி அறிவித்தல் - 1988.04.15
எல்லைகள் விரிவாக்கம் செய்து திருத்தப்பட்ட இரண்டாவது வர்த்தமானி அறிவித்தல் 2007.03.09

**முல்லைத்தீவில்**

முதலாவது வர்த்தமானி அறிவித்தலில் (1988) புளியங்குளம் சந்தி, நெடுங்கேணி சந்தியூடாக மணலாறு வரை அறிவிக்கப்பட்டது

இரண்டாவது வர்த்தமானி அறிவித்தலில் (2007) மாங்குளம் சந்தி, ஒட்டுசுட்டான் சந்தியூடாக முல்லைத்தீவு சந்தி, நந்திக்கடல் களப்புவரை விரிவாக்கம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

**மகாவலி அதிகார சபையின் திட்டம்**

தற்போது ஹற்றனிலிருந்து ஆரம்பித்து திருகோண மலையில் முடிவடைகின்றது மகாவலி ஆறு.

இதனை மத்திய மாகாணத்தில் பதுளைக்கு சற்று தள்ளி மகாவலி ஆற்றின் கீழ் உமாஓயா நீர்நிலை யில் இருந்து நன்தெனிகல நீர்நிலைக்கு கொண்டுவந்து அங்கிருந்து நன்தெனிகல – கழு கங்கை மாற்றீட்டு வாய்க்கால் (RKTC) மூலம் மொற காகந்த என்ற புதிதாக கட்டப்பட்ட குளத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தற் போது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொறகாகந்த குளத்திலிருந்து அநுராதபுரத்தில் உள்ள குறுளுவெல குளத்துக்கு நீர் கொண்டுவருவதற்காக 84 கி.மீற்றர் நீளமுள்ள வாய்க்கால் கட்டுமானப் பணி 2016 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது 2023 ஆம் ஆண்டு நிறைவுபெறுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

**இராணுவமயமாக்கல் (படையினர்) துயிலுமில்லக் காணிகள் உட்பட வளமான நிலங்கள்**

- ***தொல்பொருள் திணைக்களத்தினூடாக பௌத்தமயமாக்கல் (விகாரைகள், புத்தர் சிலைகள் நிறுவுதல்)***
- ***வனஜீவராசிகள் திணைக்களத்தினூடாக குளங்கள், ஆறுகள் ஆக்கிரமிப்பு***
- ***வன இலாகாவினுடாக, தோட்டச் செய்கை காணிகள், சிறு தானியப் பயிர்ச்செய்கை காணிகள் மற்றும் வயல் காணிகள்***
- ***மகாவலி L, J முல்லையின் தமிழர்களு டைய வளமான நீர்ப்பாசன, மானாவரிக் காணிகள்***
- ***கனியவளத் திணைக்களத்தினூடாக வளமான நிலங்கள் மற்றும் வயல் நிலங்கள் என மாவட்டத்தின் தமிழ்ர்களுடைய நிலச் சொத்துக்கள் அபகரிப்பு செய்யப்படுகின்றது.***

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# எமது கைகளைக்கொண்டே எமது கண்கள் குத்தப்படுமா?

மட்டு.நகரான்

வடகிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாகாணசபையின் வரலாற்றில் கிழக்கு மாகாணத்திற்கு முதன்முறையாக தமிழ் ஆளுனர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் வடகிழக்கு மாகாணத்திற்கு இரண்டு தமிழ் ஆளுனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயங்களை இன்று தமிழ் தேசிய பரப்பில் பல்வேறு விதமான விவாதங்களுக்கு உட்படுத்தியிருக்கும் இந்தவேளையில் இது தொடர்பில் ஆராயவேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் தமிழ் தேசிய பரப்பில் பயணிப்பவர்களுக்கும் இருக்கின்றது.

நல்லாட்சிக்காலத்தில் தமிழ் தேசிய அரசியல் பலவீனப்படுத்தப்படுவதற்கு எவ்வாறான காரணிகள் கையாளப்பட்டதோ அதே காரணிகளைக்கொண்டு மீண்டும் தமிழ் தேசிய அரசியலையும் தமிழர்களின் விடுதலை தாகத்தினையும் தணிப்பதற்கு அல்லது இல்லாமல்செய்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் அனைவர் மத்தியில் இருந்தாலும் தமிழர்கள் இருவர் கிழக்கு மாகாண ஆளுநர்களாக நியமிக்கப்பட்ட விடயமானது வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகவே இருக்கின்றது.

வடமாகாணத்தினைப்பொறுத்த வரையில் இன்று பௌத்த மயமாக்கல் என்பது பாரியளவில் நடைபெற்றுவரும் அதேவேளையில் கிழக்கு மாகாணத்திலும் அத்துமீறிய குடியேற்றங்கள் மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அது தொடர்பான விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் சர்வதேச ரீதியில் மேலெழுந்து கண்டனங்களும் அழுத்தங்களும் இலங்கை அரசாங்கத்தின்மீது மேற்கொள்ளப்படும் நிலையில் கிழக்கு மாகாண மற்றும் வடக்கு மாகாண ஆளுனர்களாக தமிழர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே வடக்கு மாகாண ஆளுனராக தமிழர் நியமிக்கப்பட்டிருந்த நிலையிலும் அவர் நீக்கப்பட்டு வேறு ஒரு தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதாவது வடகிழக்கு மாகாணம் சிங்கபௌத்த மயமாக்கல் செய்யப்படுகின்றது என்ற காரணத்தினை சர்வதேச ரீதியில் இல்லாமல் செய்யும் முயற்சியாக இருக்கலாம் என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.இன்றைய காலத்தில் வடகிழக்கு இணைந்த தாயகத்தில் தமிழ் மக்கள் சுயநிர்ண உரிமையுடன் வாழும் நிலைமையினை ஏற்படுத்தினால் மட்டுமே இலங்கையில் ஏனைய இனமக்கள் நிம்மதியாகவும் நாடு சுபீட்ச நிலையினையும் அடையும் என்பது இலங்கை அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் நன்றாக தெரியும்.

இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் ஆளுனராக செந்தில்தொண்டமான் நியமிக்கப்பட்டமை தொடர்பில் கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியிருக்கின்றபோதிலும் அடுத்தகட்டம் என்ன நடக்கும் என்பதையேதமிழ்தேசியபரப்பிலிருக்கின்றவர்கள் சிந்திக்கும் நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் தொடர்ச்சியாக சிங்கள பௌத்ததின் கடும்போக்காளர்களே கிழக்கு மாகாணத்தின் ஆளுனர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். ஒரேயொரு தடவை கிழக்கு மாகாண ஆளுனராக முஸ்லிம் சமூகத்தினை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் ஏனைய காலங்களில் சிங்கள பௌத்தத்தினைமேலாதிக்கமாககொண்டவர்களே ஆளுனர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

வடகிழக்கு மாகாணசபை அமைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் கலைக்கப்பட்ட காலம் தொடக்கம் கிழக்கு மாகாண ஆளுனர்களாக நியமிக்கப்பட்டவர்களினால் தமிழர்களின் பகுதிகளில் திட்டமிட்ட அத்துமீறல்கள் செயற்பாடு களே முன்னெடுக்கப்பட்டுள்ளதே தவிர அபிவிருத்தி செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பாக கடந்த காலத்தில் கிழக்கு மாகாண ஆளுனராக அனுராதா ஜகம்பத் இருந்த காலப்பகுதியிலேயே கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆளுனர் என்ற பதவியினைக்கொண்டு அத்துமீறிய குடியேற்றம்,சிங்கள பௌத்த மயமாக்கல் என பல்வேறு வேலைத்திட்டங்கள் தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

மயிலத்தமடு,மாதவனை பகுதியில் சுமார் 300க்கும்மேற்பட்டவர்கள்குடியேற்றப்பட்டதுடன் மேலும் பல குடும்பங்களை குடியேற்றும் செயற்பாடுகளை கிழக்கு மாகாண ஆளுனர் முன்னெடுத்திருந்தார்.

தனது அதிகாரத்தினை பயன்படுத்தி மகாவலி மற்றும் வனஇலாகா என்பனவற்றினைக்கொண்டு இந்த அத்துமீறிடிய குடியேற்றங்களை செய்ததுடன் நீதிமன்ற கட்டளையினையும் மீறிய வகையில் இந்த குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் மட்டக்களப்பு கல்குடா பகுதியிலும் பல சிங்கள குடும்பங்களைக்கொண்டு கடற்கரையோரங்களில் குடியேற்றும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.2015ஆம்ஆண்டுக்கு முன்னர் வெறும் 30குடும்பங்களே கல்குடா தொகுதியிலிருந்தன.ஆனால் இன்று நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மிகவும் தந்திரமாக குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. பெரும்பான்மையாக தமிழ் மக்கள் வாழும் பாசிக்குடா பகுதியில் சிங்கள பாடசாலை மற்றும் பௌத்த மத்திய நிலையம் என்பன கிழக்கு மாகாண ஆளுனரினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வழங்கப்பட்டுள்ளது.சிங்கள மாணவர்கள் இல்லாத இப்பகுதியில் சிங்கள பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று முழுமையாக தமிழ் பேசும் மக்கள் வாழும் மட்டக்களப்பு நகரில் சிங்கள மகா வித்தியாலயத்தினை அவசரஅவசரமாக திறந்துவைக்கும் செயற்பாட்டினையும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் முன்னெடுத்திருந்தார். இதுபோன்று வாகரை பகுதியில் நூற்றுக்கணக்கான சிங்கள குடும்பங்களை குடியேற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினரால் அவை தடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாணம் வளம்பொருந்திய மாகாணம்.இங்குள்ள வளங்கள் முறையாக அபிவிருத்திக்குட்படுத்தப்பட்டால் கிழக்கு மாகாணம் பாரிய வளர்ச்சியடையும் என்பதுடன் அதன் ஊடாக இலங்கையும் பொருளாதார வளர்ச்சியடையும். சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்யும் எந்த வேலைத்திட்டமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கபடவில்லை. பாசிக்குடாவினை தவிர்ந்து பல இயற்கை எழில்கொஞ்சும் பகுதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளபோதிலும் அவற்றினை இனங்கண்டு அபிவிருத்திசெய்ய எந்த வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. இதேபோன்று மீன்பிடித்துறை,விவசாய துறை ஆகியனவற்றில் பாரிய திட்டங்களை கொண்டு வந்து அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்கும் எந்தவித தூர நோக்குகொண்ட சிந்தனையில்லாமல் வெறுமனே சிங்கள பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளை மட்டுமே கிழக்கில் முன்னாள் ஆளுனர் முன்னெடுத்துவந்தார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு,திருகோணமலை,அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் முன்னாள் ஆளுனர் மேற்கொண்ட இனவாத செயற்பாடுகளே அவர் மீதான பாரியளவிலான அழுத்தங்களை அரசியல்வாதிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்தன.

இவ்வாறான நிலையிலேயே கிழக்கு மாகாண ஆளுனராக தொண்டமான் பரம்பரையிலிருந்து செந்தில்தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார்.இவரது நியமனம் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கைவெளியிட்டாலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எவ்வாறான நரித்ததந்திரங்களை செய்யப்போகின்றார் என்பதே இன்று பலரின் கேள்விக்குறியாகவுள்ளது. தமிழர் போராட்டத்தினை பிரித்தாளுவதற்காக எங்களுக்குள்ளேயே குழப்பங்களை ஏற்படுத்தி பிரிவினையை ஏற்படுத்தி போராட்டத்தினையே மௌனிக்கச்செய்யும் வகையில் கடுமையான நரிவேலைகளை அன்றைய பிரதமராகயிருந்து மேற்கொண்டவரே இன்று ஜனாதிபதியாக அமர்ந்திருக்கின்றார்.இவ்வாறான நிலையிலேயே அவரின் ஊடாக செந்தில்தொண்டமான் கிழக்கு மாகாண ஆளுனராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன.எமது கையைக்கொண்டே எமது கண்களைக் குத்தும் செயற்பாடுகளை ஜனாதிபதிமுன்னெடுக்கப் போகின்றாரா என்பது காலமே பதில்சொல்லும் நிலையாகவுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே புதன்கிழமை மட்;டக்களப்பில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களை சந்தித்த கிழக்கு மாகாண ஆளுனர் தனது கிழக்கினை அபிவிருத்திசெய்யும் செயற்பாட்டுக்கு ஊடகவியலாளர்களின் ஆதரவினைக்கோரியிருந்தார்.இதன்போது மகாவலி வலயத்தில் உள்ள காணிகளில் சூரிய மின்கல திட்டத்தினைமுன்னெடுப்பது குறித்தும் அதற்கான எதிர்ப்புகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக ஊடகவியலாளர் உதவியினையும் கிழக்கு மாகாண ஆளுனர் கோரியிருந்தார்.

இந்த சூரிய மின்கல திட்டம் ஊடாக 100மெகாவைட் மின்உற்பத்திசெய்யவும் அதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் மின் தேவையினை பூர்த்திசெய்யமுடியும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.உண்மையில் இந்த மின்திட்டம் ஊடாக கிழக்கு மாகாண மக் கள் பயன்பெறுவார்களானால் அதனை கிழக்கு மாகாண மக்கள் வரவேற்பார்கள்.ஆனால் விவசாய நிலத்தினை அழித்து வேறு இடங்களின் மின்தேவையினை பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படு மானால் அதற்கு எதிராக கிழக்கு மாகாண மக்கள் போர்க்கொடி தூக்குவார்கள் என்பதை கிழக்கு மாகாண ஆளுனரும் அவர்களுடன் இணைந்துள்ளவர்களும் விளங்கிக்கொள்ளவேண் டும்.

எவ்வாறாயினும் புதிய ஆளுனரின் செயற்பாடுகள் மற்றும் அவர்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களைப் பொறுத்தே அவரின் செயற்பாடுகளுக்கு தமிழ் தேசியத்தின் ஆதரவான நிலை காணப்படும் என்பதே உண்மையாகும்.

• • •

# கேள்விக்குறியாகும் தொழிற்சங்க பலம்

துரைசாமி நடராஜா

இலங்கையின் பெருந்தோட்டப் புறங்களில் தொழிற்சங்க கலாசாரம் வலுவிழந்து வருகின்றது.இதனால் தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படும், தொழிலாளர்கள் நசுக்கப்படும் அபாயநிலை மேலெழுந்து வருகின்றது.இதனை கருத்தில் கொண்டு தொழிற்சங்க கலாசாரத்தின் இருப்பினைப் பேணி அதனூடாக பல்வேறு சாதக விளைவுகளையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.இது குறித்து அனைவரும் விழிப்புடன் செயற்படுதல் வேண்டும்.

தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் காவலனாக விளங்குகின்றன.தொழிலாளர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து அவர்களின் எழுச்சிக்கு வழிகாட்டுகின்றன. உலகில் தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கக் காரணம் தொழிலாளர்களது பாதுகாப்பு, உரிமைகள் என்பவற்றைப் பேணி அவர்களை சுதந்திர மானவர்களாக வாழவைப்பதற்காகும். இந்த வகையில் தொழிலாளர் ஒருவர் தான் சார்ந்துள்ள தொழிற்சங்கத்தினதும் தனது நாட்டின் தொழிற்சங்க இயக்கத்தினதும் வரலாற்றைப் பற்றித் தெரியாமலும் தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதின் முக்கியத்துவத்தை உணராமலும், தொழிற்சங்கமொன்றில் தனது உரிமைகள் என்ன, கடமைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளாமலும் இருக்கும் வரையில் ஒரு தொழிற்சங்கத்தினால் அவருக்கு எந்தவித பயன்களோ அல்லது அவரால் தொழிற்சங்கத்துக்கு எந்தவித நன்மைகளோ ஏற்படப்போவதில்லை.மாறாக இவர் தொழிற்சங்கத்தில் வெறுமனே அர்த்தமற்ற ஒரு அங்கத்தவராக இருக்கவேண்டிய நிலையே ஏற்படும் என்பது மூத்த தொழிற்சங்கவாதிகளின் கருத்தாகவுள்ளது.

எனவே ஏதேனும் ஒரு தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒருவர் மேற்படி விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது.இந்த வகையில் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு பல்வேறு சேவைகளையும் வழங்கி வருகின்றன. கல்வி அபிவிருத்தி,கலை கலாசார விளையாட்டு அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி திட்டம், தொழில் உறவுகளைப் பேணுதல், பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற பல விடயங்களிலும் தொழிற்சங்கங்களின் வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பு என்பன மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது. கல்வி அபிவிருத்தி எனும்போது தொழிற்சங்கக் கல்வி மற்றும் பொதுக்கல்வி அபிவிருத்தி இரண்டிலும் தொழிற்சங்கங்களின் வகிபாகம் அளப்பரியதாகும்.

தோட்டத் தொழிலாளர்கள் தொழில் புரியும் சந்தர்ப்பங்களில் நிர்வாகத்தின் பல்வேறு கெடுபிடிகளுக்கும், தொழில் ரீதியான உரிமை மீறல்களுக்கும் உள்ளாகி வருவதனை நாம் காண்கிறோம்.இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்து இரு தரப்பினரிடையேயும் சுமுகமான உறவினை கட்டியெழுப்புவதற்கு தொழிற்சங்கங்கள் கூடுதல் கவனம் செலுத்துகின்றன.சுமுகமான பேச்சு வார்த்தைகள், சட்ட ரீதியான முயற்சிகள், வேலை நிறுத்தப் போராட்டங்கள், மெதுவாக பணிபுரிதல் போன்ற பல முன்னெடுப்புக்களின் ஊடாக தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்ட முயற்சி செய்கின்றன. இதேவேளை தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அரசியல் ரீதியாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு தொழிலாளர்கள் தொடர்பான சட்டங்கள், விதிமுறைகள், தீர்மானங்கள் என்பவற்றை ஆக்குதல், நடைமுறைப்படுத்துதல் என்பவற்றுக்கும் தொழிற்சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த வகையில் மலையக மக்களிடையே தொழிற்சங்க கலாசாரம் என்பது அவ்வளவு இலகுவாக வேரூன்றி விடவில்லை.பல்வேறு சிக்கல்கள், முட்டுக்கட்டைகள் என்பவற்றுக்குப் பின்னரே தோட்டங்களில் தொழிற்சங்க கலாசாரம் வேரூன்றத் தொடங்கியது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆரம்பத்தில் தோட்டங்களில் தொழிற்சங்கங்கள் உள்நுழைந்து விடக்கூடாது என்பதில் நிர்வாகங்கள் மிகவும் கவனமாக இருந்தன. தோட்டங்களில் தொழிற்சங்க கலாசாரம் உள்நுழைந்துவிட்டால் அது தமது நிர்வாக ரீதியான செயற்பாடுகளுக்கு இடையூறை ஏற்படுத்தும், தொழிலாளர்களிடம் வேலை வாங்குவது சிரமமாகிவிடும், தொழிலாளர்கள் தமது உரிமைகள் குறித்து அதிகமாக பேசத் தொடங்கிவிடுவார்கள்.அது தமக்கு சிக்கலை ஏற்படுத்துவதாக அமையும் என்று நிர்வாகங்கள் எண்ணம் கொண்டிருந்தன.இதனால் தொழிற்சங்கங்களை அவர்கள் வெறுத்தனர்.நகர்ப்புறங்களில் இடம்பெறும் தொழிற்சங்க நிகழ்வுகளில் கூட தொழிலாளர்களை பங்கு கொள்ள விடாது தடுத்து நிறுத்துவதிலும் நிர்வாகங்கள் சளைத்துவிடவில்லை.பல்வேறு இழுபறிகளுக்கும் மத்தியில் தொழிற்சங்கங்கள் தோட்டங்களில் உள்நுழைந்த நிலையில் அவை தொழிலாளர்களுக்கு வழங்கிய சேவைகளை குறைத்து மதிப்பிடுவதற்கில்லை .

### நவீனத்துவம் இல்லாமை

தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்ந்தன.பாமர மக்களுக்கு வழிகாட்டி ஆலோசனை வழங்குவதில் தொழிற்சங்கங்கள் முன்னின்றன. இதனால் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான பிணைப்புமென்மேலும் அதிகரித்தது.குறிப்பாக ஏனைய தொழிற்றுறையினரைக் காட்டிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான உறவு என்பது ஒருபடி அதிகமாகவே இருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.இவ்வாறாக தொழிலாளர்களின் காவலனாக விளங்கிய தொழிற்சங்கங்கள் இன்று படிப்படியாக செல்வாக்கிழந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.தொழிற்சங்கங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள், தூரநோக்கின்மை, தொழிற்சங்க நடவடிக்கைகள் பாரம்பரிய நடைமுறையில் இருந்து வரும் நிலையில் நவீனத்துவம் உட்புகுத்தப்படாமை எனப்பலவும் சமகாலத்தில் தொழிற்சங்கத்தின் இருப்புக்கு சவாலாக இருந்து வருகின்றன.இவற்றோடு சமகாலத்தில் பொருளாதார நெருக்கீடு அதிகரித்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கணிசமாக அதிகரித்துள்ளன.எனினும் தொழிற்சங்க பணியாளர்களுக்கு குறைவான ஊதியமே மாதாந்தம் தொழிற்சங்கங்களினால் வழங்கப்படுவதாக தொழிற்சங்கப் பணியாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். இவ்வூதியப் பற்றாக்குறை நிலையானது அவர்கள் வாழ்க்கையை கொண்டு நடாத்துவதில் இடர்பாடுகளை தோற்றுவித்துள்ளது.எனவே அவர்களில் பலர் மாற்றுத் தொழில்களை நாடிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.இத்தகைய நிலைமைகளும் தொழிற்சங்க கலாசாரத்தின் வீழ்ச்சிக்கு ஏதுவாகின்றன என்பதையும் கூறியாக வேண்டும்.

அத்துடன் தொழிற்சங்கங்கள் தமது இலக்கிலிருந்தும் மாறுபட்டு சுயநலவாத சிந்தனைகளை மையப்படுத்தி செயற்படுவதாகவும் ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. தொழிற்சங்கவாதிகள் தொழிற்சங்கத்தை மையப்படுத்தி அரசியல் களம் புகுவதற்கு முயற்சிக்கின்றார்களே தவிர தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதாக இல்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கும் பஞ்சமில்லை.இத்தகைய அதிருப்திகளால் தொழிற்சங்க கலாசாரத்தின் வலுவிழந்த போக்கினை இப்போது அவதானிக்க முடிகின்றது. இலங்கையின் பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனியினர் அதிகரித்த அல்லது உழைப்பிற்கேற்ற சம்பளத்தினை தொழிலாளர்களுக்கு வழங்கமுடியாத நிலையில் தாம் சவால்களை எதிர்கொள்வதாக தெரிவித்து வருகின்றனர்.உற்பத்திச்செலவு அதிகமென்றும் அவர்கள் காரணம் காட்டுகின்றனர்.இந்நிலையில் வெளியார் உற்பத்தி முறைக்கு அவர்கள் அதிகமாகவே அழுத்தம் கொடுத்து வருகின்றனர். எதிர்காலத்தில் இது சாத்தியப்படுமிடத்து தொழிற்சங்கங்கள் மேலும் வலுவிழக்கும் அபாயம் ஏற்படும் என்றும் அஞ்சப்படுகின்றது. தமது தொழிற்சங்கத்துக்கு அங்கத்தினர்களை இணைத்துக் கொள்ளும் போதும், தேர்தல் காலங்களிலும் தொழிலாளர்களை அரவணைக்கும் தொழிற்சங்கங்கள் பின்னர் அவர்களுக்கு உரிய அங்கீகாரம் அளிப்பதில்லை என்றும் சிலர் வாதிடுகின்றனர்.

தொழிற்சங்க கலாசாரம் வலுவிழக்கும் அல்லது தொழிற்சங்கங்களின் இருப்பு கேள்விக்குறியாகுமிடத்து தொழிலாளர்கள் இதனால் மிகுந்த பாதிப்பை எதிர்நோக்குவார்கள்.தொழிற்சங்கங்கள் உரிமைக்கு குரல் கொடுக்கும் நிலை மழுங்கடிக்கப்படுவதால் நிர்வாகத்தினரின் கை ஓங்கிவிடும். இது தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையே முரண்பாடுகள் மேலோங்குவதற்கு உந்துசக்தியாக அமைந்துவிடும்.தொழிற்சங்க ஐக்கியமானது பேரம்பேசும் சக்திக்கு அடித்தளமிடுகின்றது.கடந்த காலங்களில் பேரம்பேசும் சக்தியின் ஊடாக தொழிலாளர்கள் பல்வேறு நன்மைகளையும் பெற்றுக் கொண்டுள்ளமையும் தெரிந்த விடயமாகும்.இந்நிலையில் தொழிற்சங்கங்கள் தடமிழக்கும் அல்லது வலுவிழக்கும் நிலையில் அது தொழிலாளர்களுக்கு சாதக விளைவுகளை ஏற்படுத்தாது.எனவே இதனை கருத்தில் கொண்டு மலையகத்தில் தொழிற்சங்க கலாசாரத்தை வலுப்படுத்த அனைவரும் உறுதி பூணவேண்டும்.மேலும் தொழிற்சங்கங்கள் தமக்கிடையே நிலவும் முரண்பாடுகளை வேரறுத்து ஓரணியில் நின்று தொழிலாளர்களின் நலன்களுக்காக குரல் கொடுக்க முற்பட வேண்டும்.பொதுவான விடயங்களிலாவது இது சாத்தியப்பட வேண்டும்.


• • •

## இளையோரே சிகரம் நீங்கள்

# போர்க்களங்களைப் பூஞ்சோலைகளாக மாற்றுவோம்

கவிதா ஆல்பர்ட்

மேகங்களால் சூழ்ந்த வானம் சோகங்களால் சூழ்ந்த மேகங்களால் அழுவது போல், வளங்களைச் சுமந்து வளமாக இருந்த பூமி, ஆயுத அபாயங்களால் நிறைந்து வருவதால், எரிமலைகளாக குமுறி அழுகிறது. மனிதர்களின் உணர்ச்சி மொழிகளையே அறியாத மானுடர்களால் இயற்கையின் அழுகுரலை அறிந்து கொள்ளவா முடியும்?



தாவரங்கள் இயற்கைக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளால் குமுறி அழுவதை இஸ்ரேல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மனிதர்களை அழவைத்து இரசித்துக் கொண்டிருக்கும் நாம், இப்போது இயற்கையையும் அழவைத்து இரசிக்க ஆரம்பித்துவிட்டோம். உலகம் முழுவதும் உண்ண உணவின்றி மடிந்துவருபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் உலக நாடுகள் மக்களின் உணவுத் தேவைகளில் கவனம் செலுத்தாமல் அழிக்கும் ஆயுதக் குவியல்களை உருவாக்குவதிலேயே கவனம் செலுத்துகின்றன.

இன்று வர்த்தகங்களிலெல்லாம் அதிக விசனம் தருகின்ற வர்த்தகமாக அணு ஆயுத வர்த்தகம் தான் இருக்கிறது. அதற்குத் தான் நாடுகளும் அரசுகளும் முக்கியத்துவம் வழங்குகின்றன. நாடுகளோடு நாங்கள் ஏன் போரிட வேண்டும்? நாடுகளையும் மக்களையும் சிதறடித்து அழிக்கும் கொடுமையை ஏன் செய்ய வேண்டும்? என்கிற கேள்வி ஒவ்வொரு இளையவர் உள்ளத்திலும் உருவாக வேண்டும். இனிவரும் தலைமுறையாவது போர்களில்லாத ஓர் உலகைப் படைக்க முன்வரவேண்டும்.

கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் மதிப்பெண்கள் அதிகம் பெறுவதிலும், தரமான கல்வி என்ற பெயரில் வெளிநாட்டு மோகத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. உயர் தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்வதும் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணுவதும் தவறில்லை. ஆனால் அதுமட்டும் தான் நோக்கமாக இருக்குமாயின் அந்த இலக்கு தவறானது.



காரணம் பூமி வெப்பமயமாகிக் கொண்டிருக்கிறது. வரலாறு காணாத வெப்பம் உலகத்தையே வாட்டி எடுத்துக்கொண்டிருக்கிறது. "சோலைவனங்கள் எல்லாம் பாலைவனங்கள் ஆகும். பாலைவனங்கள் சோலைவனங்கள் ஆகும்" என்கிற திருவிவிலியத்தின் வார்த்தைகளின்படி முடிவு நாளை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோமா? என்ற கேள்வியும் எண்ணமும் மனிதர்களின் உள்ளங்களில் எழத் தொடங்கிவிட்டது.

இன்று போட்டி போட்டுக்கொண்டு உலக நாடுகள் அணு ஆயுதப் பெருக்கத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. யார் பெரியவன்? என்கிற போட்டியில் வெற்றிபெறவேண்டும் என்னும் நோக்கில் ஒவ்வொரு நாடும் விதம் விதமான அணுவாயுத சோதனைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன.



இளையோர் பலர் இனங்காண முடியாத காரணங்களால் அதிர்ச்சிகரமான அதிரடி மரணங்களைத் தழுவிக்கொண்டிருக்கின்றனர். எதைப் பற்றியும் யாருக்கும் கவலை இல்லை. நாமும் நமது குடும்பமும் வாழ்ந்தால் போதும் என்று ஒருசிலர், பணம் இருக்கிறது என்பதற்காக எதையும் செய்யத் துணியும் இளையோர், நாட்டுப்பற்று என்று சொல்லி போரில் ஈடுபடுத்தப்பட்டுப் பலியாக்கப்பட்டு வரும் இளையோர் என்று இன்று இளையோரின் ஆற்றல் முழுவதும் அறிவு என்ற பார்வையில் (போர்வையில்) பயனற்ற முறையில் உலகினரால் வீணடிக்கப்பட்டு வருகிறது.



வழிகாட்டிகள் சிறப்பாக இருந்தால் தான் அவர்களைத் தொடர்ந்து பயணம் செய்வோர் பாதுகாப்பான முறையில் சிறப்பாகப் பயணம் செய்ய முடியும். எம் இளையோரின் எதிர்காலம் இராணுவ முகாம்களிலும், போர்க்களங்களிலும் ஆயுத உருவாக்கங்களிலும் அவர்கள் ஆற்றல் வீணடிக்கப்பட்டு, அழிக்கப்படுவது கண்டு இதயம் வலிக்கிறது.

முதிர்ச்சியற்ற முதியவர்களின் கரங்களில் தொடர்ந்து ஆட்சிக்கட்டிலைக் கொடுத்துவிட்டு, அப்பாவி இளையோர் அடிமைகளாக அல்லல் படும் நிலை உலகம் முழுவதும் விரவிக் கிடப்பதைக் காணும் எம் அன்பு இளையோரே, விழுந்து கிடக்கும் மாயக் கவர்ச்சிகளிலிருந்து மாற்றம் பெற்று மகத்தான எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியில் உங்களை நீங்கள் எப்படி உருமாற்றிக்கொள்ளப்போகிறீர்கள்?

அரசுகளை மீட்டெடுத்தால் தான் அதிகார மமதையிலிருக்கும் அரக்கர்களிடமிருந்து அப்பாவி மக்களை மீட்டெடுக்க முடியும். பண்பட்ட உள்ளமும் உயர்ந்த இலட்சியமும் சிறந்த பார்வையும் சீரிய செயல்திறனும் கொண்ட இளையோர் ஒன்றிணைய வேண்டும். அரசியலில் நீங்கள் ஆழமாக வேரூன்ற வேண்டும். நமக்கேன் என்று நாம் சிந்தித்தோமானால் நமக்கும் நமது சந்ததிக்கும் இந்த உலகில் ஓர் அமைதியான பண்பட்ட சிறப்புமிக்க வாழ்வு இங்கு சாத்தியமாகாது.

நாம் உணர்வுமிக்கவர்கள், செயற்கரிய சிந்தனைத்திறன் உடையவர்கள். தொங்கிக் கொண்டிருக்கும் பந்து போன்ற அமைப்பில் உள்ள உலகைப் பக்குவமாகக் கையாள்வோமானால் அதுவும் நம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்கும். மாறாக ஓங்கி உயர்ந்த கட்டடங்கள், பூமியை அதிரவைத்துக் கொண்டிருக்கும் ஆயுதப்பூக்களால் தொடர்ந்து பூமியை அச்சுறுத்திக்கொண்டே இருக்கிறோம். நாடுகளோடு நாடுகள் போரிடும் நிலைக்குச் செல்ல வேண்டாம். இப்படி பூமித்தாய்க்கு அழுத்தம் கொடுத்துத் துன்புறுத்துவோமானால், பூமித்தாய் அழுத்தம் தாங்காமல் அலறி அழுவாள். ஓங்கும் எரிமலைகளும் பூகம்பங்களும் சுனாமிகளும் தோன்றி உலகம் அழிவைக் காண்பது உறுதி.

எனவே அன்பு இளையோரே, கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு என்ற பாரதியின் வரிகளை எண்ணத்தில் கொண்டு உலகைக் காக்கும் சிந்தனையோடு, உலகில் போரலைகளாகத் தோன்றிக்கொண்டிருக்கும் பேரலைகளில் சிக்கிச் சின்னாபின்னமாகும் நபர்களில் நீங்களும் ஒருவராக இலலாமல் உங்கள் அறிவை, ஆற்றலை ஊக்கமாகக்கொண்டு, புதியதோர் உலகைச் செய்யும் புதிய எண்ணங்களை உருவாக்கத் திட்டமிடுவோம். போரிடும் கெட்ட உலகை வேரோடு சாய்த்து, ஒவ்வொரு தனிமனிதனும் அச்சமின்றி அமைதியுடன் மனநிறைவுடன் இன்பமாக வாழ வழிசமைப்போம். "ஐந்து இளைஞர்களை எனக்குத் தாருங்கள். இந்த உலகையே மாற்றிக் காட்டுகிறேன்" என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளை மனதில் கொண்டு வென்று காட்டுவோம்.

**தொடரும்**

### மேற்குலகத்தின் ... தொடர்ச்சி...

உறுப்பு நாடுகளிடம் நடைமுறையில் இருக்கும் எனவும் ஏனைய நாடுகள் அதில் இணைய விரும்பினால் விண்ணப்பிக்கலாம் எனவும் இந்த கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவினால் தடை விதிக்கப்பட்ட நாடுகள் 10 விகிதத்திற்கும் குறைவான வர்த்தகத்தையே டொலரில் மேற்கொள்கின்றன இரண்டு வருடங்களுக்கு முன்னர் அது 30 விகிதமாக இருந்தது என ஈரானின் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட தடைகளின் பின்னர் ரஸ்யா தனது சொந்த பண பரிமாற்ற முறைக்கு மாறியிருந்தது. அதன் சேவையில் தற்போது 469 பங்குதாரர்களும், 14 நாடுகளும், 115 வெளிநாட்டு நிறுவனங்களும் இணைந்துள்ளன.

### குப்பை மேட்டு... தொடர்ச்சி ...

நாய்களும் பெருக்கமடைந்து காணப்படுகிறது. எனவே எங்களுக்கான பாதுகாப்பான யானை வேலி தேவை என்பதுடன் குப்பை மேட்டை அகற்ற வழி செய்யுங்கள். இந்த கிராமத்தில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர் பலரை காட்டு யானை துரத்தியுள்ளது. எங்கள் கிராமம் பனை மரங்களை அதிகம் கொண்ட பகுதி. இதனை நோக்கி சாப்பிடுவதற்காக யானை ஊருக்குள் வருகிறது இதனால் இரவு நேரங்களில் வெளியில் இறங்க முடியாது. பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறோம்.



பாலம்போட்டாறு ஜெயபுர பகுதியின் ஒரு பகுதி ஊடாக யானை வேலா காணப்பட்டாலும் எமது கிராமத்துக்கான பாதுகாப்பான வேலி இல்லை. இது தொடர்பில் பல முறை பிரதேச சபைக்கு கடிதம் மூலமான கோரிக்கை செய்யப் பட்டும் பலன் கிட்டவில்லை. இந்த குப்பை மேட்டு பிரச்சினை, யானை தொல்லைகளில் இருந்தும் பாதுகாப்பு பெற்றுத் தாருங்கள் என பத்தினி புர மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எஸ்.கௌரி தனது கருத்தை உரத்த குரலில் வெளிப்படுத்தினார்.

மக்கள் இது தொடர்பில் போராட்களை முன்னர் தீர்வு வேண்டி நடாத்தியிருந்தாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது பெரும் குறைபாடாக காணப்படுகிறது.

குப்பை மேட்டினால் ஓரிரு பிரச்சினைகள் மாத்திரமல்ல ஒட்டு மொத்தமாக சூழல் மாசடைவு உட்பட பல பாதகமான தாக்கங்களை உண்டு பண்ணுகிறது. இதனால் அதன் ஊடாக பயணிக்கும் பாதசாரிகள் அதனை அண்டியுள்ள குடியிருப்பு பிரதேச மக்களும் பாதிக்கப்படலாம். இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வின்றியே மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் .யானை மனித மோதல் ஏற்கனவே இருந்து வந்தாலும் குப்பை மேட்டினால் மேலும் இக் காட்டு யானை தொல்லை அதிகரித்து காணப்படுகிறது.

எனவே இம் மக்களின் பிரச்சினைகளாக யானை தொல்லை,குப்பை மேட்டை அகற்றுதல் தொடர்பில் எப்போது தீர்வு கிட்டும் என இம் மக்களின் ஏகோபித்த ஒரே ஒரு எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •

### மீனவர் பிரச்ச... தொடர்ச்சி ...

செய்யாமையும் இம்மீனவர்களின் தொழிலை மிகவும் பாதிக்கின்றது.

எனவே அரசாங்கம் இந்த மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவானதும் நிலையானதுமான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த உடனடி நடவடிக்க எடுக்க வேணடும் என்றார்.

• • •

### வடகொரியாவின் ... தொடர்ச்சி ...

அதில் 3 தோல்வியில் முடிவடைந்ததுடன், 2 செய்மதிகள் வெற்றிகரமாக விண்வெளியில் செலுத்தப்பட்டிருந்தன. ஆனால் அவற்றில் இருந்து சமிக்கைகள் தென்படாததால் அவை செயலிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### தமிழர்களையும்... தொடர்ச்சி ...

தாக்குதல் 2019, ஏப்ரல்,21 ல் இடம்பெற்ற பின்னரே உணர்ந்தனர்.

இன்று 32, வருடங்களாக தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் சக்கதிகள் ஒன்றுபட்டு ஒரு குடையின் கீழ் ஒரு தீர்மானம் எடுக்கமுடியாமல் போனதற்கு அன்றய 1990, ல் ஜனாதிபதியாக இருந்த ஆர் .பிரமதாசாவின் பிரித்தாளும் தந்திரத்திற்கு கிடைத்த வெற்றி என்பதே உண்மை.

• • •

### பொருளாதார... தொடர்ச்சி ...

இணைந்து கடன் பெறும் தொகையை உயர்த்தும் உடன்பாட்டை நிறை வேற்றியுள்ளன.

குடியரசுக் கட்சியை சோந்த 149 பேரும் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த 165 பேரும் ஆதரவாகவும் குடியரசுக் கட்சியை சோந்த 71 பேரும் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த 46 பேரும் எதிராகவும் வாக் களித்துள்ளனர்.

இந்த தீர்மானத்திற்கான ஒப்புதலை செனட் சபை வழங்க வேண்டும். அதனை எதிர்வரும் திங்கட்கிழமை (5) அவர்கள் வழங்கு வார்கள் என எதிர்பார்க்கப்படு கின்றது.

இந்த வாக்கெடுப்பை தொடர்ந்து பேசிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அமெரிக்காவை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார்.

எனினும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மக்களுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைப்பதால் அது பல விமர்சனங்களை சந்தித்துள்ளது.

### ஊடகங்கள்... தொடர்ச்சி ...

மேலும் சிறப்பாக கொண்டு செல்வதற்கு உதவும் வகையிலேயே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது" என்பதுதான் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் கருத்து. "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பது போல அமைச்சரின் கருத்து அமைந்திருக்கின்றது.

உருவாகக்கூடிய எந்தவொரு கிளர்ச்சியையும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது எனக் காட்டிக்கொள்வதும், அதற்கு ஊடகங்கள் துணை புரிவதைத் தடுப்பதும்தான் அரசாங்கத்தின் திட்டம். இதற்கு ஏற்றவகையிலான சட்ட வரைபு ஒன்றை அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தனது மூளையைப் பிசைந்து தயாரித்திருக்கின்றார். இம்மாத இறுதிக்குள் இதனைக் கொண்டுவருவதுதான் அரசாங்கத்தின் திட்டம். ஏற்கனவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவிருக்கின்றது. இவ்விரண்டும் நடைமுறைக்கு வந்தால், சர்வாதிகார ஆட்சிக்கு உதாரணமாக இலங்கை மாறிவிடும் என்பதுதான உண்மை!

• • •

### தமிழர்களின்... தொடர்ச்சி...

- **படையினர் - 34362 ஏக்கர்**
- **வன இலாகா - 43567 ஏக்கர்**
- **வன ஜீவராசிகள் - 25517 ஏக்கர்**
- **மகாவலி-L - 4368 ஏக்கர்**
- **தொல்லியல் - 1860 ஏக்கர்**
- **இல்மனைற் - 44 ஏக்கர்**

**மொத்தம் - 109718 ஏக்கர்**

## மணலாறு 28500 ஏக்கர்

- ***மகாவலி J வலயத்தினுள் உள்வாங்கப் பட்டுள்ள கிராமங்களில் உள்ள அரச, தனியார், காணி விபரங்கள் வீதிகள், குளங்கள், வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக் களங்களுக்குச் சொந்தமான காணிகள் இதன் விபரங்களை தமக்கு அனுப்பிவைக்குமாறு சம்பந்தபட்ட திணைக்களங்களுக்கு கடந்த 02 ஆம் திகதி (05 ஆம் மாதம்) சிங்களத்தில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.***

• • •

### பொருளாதார நெரு ... தொடர்ச்சி...

எங்களின் மனிதாபிமான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக சவாலான தருணங்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஐசிஆர்சி எஸ்எல்ஆர்சியுடன் இணைந்து செயற்பட்டது என குறிப்பிட்டுள்ளார்.

### மேற்குலக ஊடக... தொடர்ச்சி...

வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த ஊடகங்கள் வழமை யாக ஒபேக் கூட்டங்களுக்கு அழைக்கப்படும்போதும் இந்த முறை ஏற்பாட்டாளர்கள் நேரிடையாக ஊடகவியலாளர்களுக்கு தனிப் பட்ட முறையில் அழைப்புக்களை அனுப்பியுள்ள னர். அதாவது ஊடகங்கள் தாம் விரும்பும் ஊடக வியலாளர்களை நிகழ்வுக்கு அனுப்புவதை அவர்கள் இதன் மூலம் தடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தாம்கவலை அடைந்துள்ளதாக றொய்ட்டர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பில் ஒபேக் அமைப்புடன்தாம் தொடர்பு கொண்டபோதும் அவர்கள் பதில் அளிக்கவில்லை என புளும் பேர்க் தெரிவித்துள்ளது. எனினும் தாம் ஊடகவியலாளர்களை இந்த நிகழ்வுக்கு அனுப்பபோவதாக அவை தெரிவித்துள்ளன.

இந்த புறக்கணிப்பின் பின்னனியில் சவுதி அரேபியாவின் எரி சக்தித்துறை அமைச்சர் இளவரசர் அப்துல்லாசிஸ் பின் சல்மான் இருப்பதாக பிரித்தானியாவின் த பைனான்சியல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

### சிகரட்டுகளில்... தொடர்ச்சி ...

தெரிவித்தள்ளார். இந்த கட்டுப்பாடுகள் மூலம் கனடாவில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கையை 2035 ஆம் ஆண்டு 5 விகித்தை விட குறைவானதாக மாற்றமுடியும் என அவர் மேலும் தெரிவித்தள்ளார்.

சிகரட் பெட்டிகளில் எச்சரிக்கை வாசகங்கள் உள்ளடக்கப்படுவதை கனடா 1989 ஆம் ஆண்டே கொண்டுவந்தபோதும் பிரித்தானியா 1971 ஆம் ஆண்டும் அமெரிக்கா 1965 ஆம் ஆண்டும் நடைமுறைப்படுத்தியிருந்தன.

1960 களில் அமெரிக்காவில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை 42 விகிதமாக இருந்தபோதும் அது தற்போது 11 விகிதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. ஆனால் இலத்திரனியல் சிகரட்டுக்களின் பாவனை அதிகரித்துள்ளது.

### நினைவுகள்... தொடர்ச்சி ...

அவர்கள் ஊடகத்துறைக்கு ஆற்றிய அளப்பரிய பணிகளையும், இந்நூலின் வழி அவர் இயற்கை எய்திய பின்னும் ஊடகத்துறைக்கு ஆற்றும் பணிகளையும் வியந்துரைத்தார்.

யாழ் பல்கலைகழக அரச அறிவியல் துறை தலைவர் பேராசிரியர் K. T. கணேசலிங்கம் அவர்கள் திரு. மாணிக்கவாசகம் அவர்களையும் அவரதம் நூலையும் அரசியல் நோக்கு என்னும் கண்ணோட்டத்தில் ஆய்வுக்குட்படுத்திப் பேசினார். அவரது உரை அமரர் மாணிக்கவாசகம் எந்தளவு தூரம் அரசியலில் தூர நோக்குடையவராக திகழ்ந்தார் என்பதை கோடிட்டுக்காட்டியது.

யாழ் பல்கலைகழக ஊடகவியற் கற்கைத் துறை வருகைதரு விரிவுரையாளரும் பிரபல ஊடகவியலாளருமாகிய அ. நிக்ஸன் அவர்கள் நூலினை சமூக நோக்கு என்னும் பார்வையில் ஆய்வு செய்தார். நூலாசிரியர் எந்தளவிற்கு ஒரு சமூக சிந்தனையாளராகவும், தத்துவார்த்தவாதியாகவும் வாழ்ந்தார் என்பதை அவரது ஆய்வு படம் பிடித்துக் காட்டியது.

இறுதியாக திருமதி மாணிக்கவாசகம் அவர்களின் நெஞ்சை நெகிழ வைத்த நன்றி நவிலலுடன் விழா இனிதாக நிறைவுக்கு வந்தது.

## அன்பு நேயர்களுக்கு!

எமது எதிர்கால சிற்பிகளான தமிழ் சிறார்களின் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு மேம்பாட்டினை இலக்காக கொண்டு வெளிவரும் இலக்கு வார இதழின் சிறுவர் தளத் திற்கான தங்கள், ᵘரைகள், கவிதைகள், ஓவியங்கள் மற்றும் வாழ்வுக்கு வழிகாட்டும் தமிழர் நாகரீகம் தொடர்பான சிறு குறிப்பு கள் ஆகியவற்றை பகிர்ந்து ஓர் செழிப்பான நிலைத்த எதிர்கால தமிழ் சந்ததியை உருவாக்க இணையுமாறு இலக்கு உங்களை வரவேற்கிறது!

தொடர்புகளுக்கு : info@ilakku.org


**நிவேதிகா** - பாலையூற்று



**டிக்ஷாயினி** - திருகோணமலை



**டிலக்ஷன்** - திருகோணமலை



**திகழினி** - திருகோணமலை



**சாத்துப்படி** ( சைவ ஆலயங்களில் அலங்காரங்களுக்கு பயன்படுத்துவது)